தமிழீழ ஆவணக் காப்பகம்

RAYA
87 RUE ... COLOMBES
92600 ...RES SUR -
- SEINE ; FRANCE

மகளிர் தினம்
பங்குனி - 8



# எரிமலை

கலை கலாச்சார அரசியல் சமூக ஏடு மாசி.15 - பங்குனி.15, 1992

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



அக்கினிப்படை

சூரியனை நோக்கி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உள்ளே மலர்பவை



**வளரும் கலை**

நவீன ஓவியம் அடிப்படையில் சுயா தீனமானது, அது இன்னொன்றை அண்டிநிற்பதில்லை. அதன் இருப்பிற்கு அது மதத்தினதோ, ஆசிரியரினதோ நியாயப்படுத்தலை வேண்டி நிற்பதில்லை. ஆக நவீன ஓவியம் தனது இருப்பிற்கான தேவையை, அர்த்தத்தை தன்னகத்தே கொண்டுள்ளது.

...........07

**நினைவு மீட்பு**

அவன் இரத்தம் ஓடிச் செத்துப்போக எனக்கு ஒரு மாதிரிப் போச்சு. செத்தவனுடைய துவக்கை இழுத்துப் பார்த்தேன்; அது நல்லாக் கொழுவுப் பட்டு இருந்ததால் வரமாட்டன் எண்டிருந்தது. ஆனால் இராமசாமி பாளைக் கத்தியால் அவனின் பெல்டை வெட்டித் துவக்கை எடுத்து அதனை முறித்துப்போட்டு, அதற்குரிய குண்டுகளையும் கொண்டுபோய் கடலுக்குள் எறிந்துவிட்டார்.

...........13



**மாற்றத்தைத்தேடி**



தமிழீழ தேசிய விடுதலைப் போராட் டத்தில், தமிழீழப் பெண்களின் அதீத ஈடுபாடானது, அரசி யல் விழிப்புணர்வானது, தாம் வரித்துநிற்கும் கொள்கைகளுக்காகத் தங்களை அர்ப்பணிக்கும் மனோபாவமானது தென்னாசியப் பெண்களிடத்தே தாக்கத்தினை விளைவிக்கக்கூடிய செயல்முறை யாகக் கருதப்படுகின்றது.

...........18

**உறவு**

தமிழீழ விடுதலைப்போரை ஆதரிப்பது தமிழகத் தமிழர்களுக்கு ஒரு தார்மீகக் கடமை மட்டுமல்ல; ஒரு சகோதரக்கடமையும், பிறப்புரிமையுமாகும். ஆனால், ஈழவிடுதலைப் போராட்டமும், தமிழகத் தின் தன்னுரிமைப் போராட்டமும் களம், காலம், உள்ளடக்கம், வடிவம் இவற்றால் வேறுபட்டவை.

...........25



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



## எரிமலை

கலை கலாச்சார
அரசியல் சமூக ஏடு

பதினோராம் ஆண்டு

மாசி. 15 - பங்குனி. 15
1992



ஆக்கங்கள்,
அபிப்பிராயங்கள்,
மற்றும் தொடர்புகட்கு:

எரிமலை
c/o C. C. T - France,
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42


# அமைதி

யாழ்குடாநாடு மீது, யுத்தமேகங்கள் சூழ்ந்து நிற்கின்றன. எக்கணமும், சிறீலங்கா இனவாத அரசின் பயங்கரவாதம், குண்டுகளாய் மக்கள் தலையில் இறங்கலாம். இனப்பிரச் சனைக்கு, இராணுவத் தீர்வு காண்பதிலுள்ள வெறித்தன மான விருப்பத்தின் வெளிப்பாடாய், குடாநாட்டில் படையின ரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள முகாம்களில், படை யினரின் செறிவும், யுத்தக் கருவிகளின் குவிப்பும் கருத்தில் கொள்ளப்படுகின்றது. சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா, சமாதானத்தின் பால், அமைதியின்பால் நாட்டம் கொண்டவ ராய் தன்னைக் காட்டிக்கொள்ளும் அதேவேளை, தமிழ் மக்களை பட்டினியால், கொடிய நோய்களால் சாகடிக்கவும், பணியவைக்கவும் முனைந்து நிற்கின்றார். சமகாலத்தில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை கட்டவிழ்த்து விடு வதன் மூலம் அவர்களது உரிமைக் குரலை அடக்கிவிடலாம் என்றும் கனவுகாணுகின்றார். தமிழ் மக்களின் தேசியப்ப டையான விடுதலைப் புலிகள் தற்சமயம் பலவீனமாக உள்ளனர் என்று, இராணுவ உயர்பீடம் கருதுவதும், பிரே மதாசாவின், போர் ஆர்வத்திற்கான முக்கிய காரணமாகக் கருதப்படுகின்றது.

இனப்பிரச்சனை வேறு, வடக்கு கிழக்கில் புலிகளின் பயங்கரவாதம் வேறு என்று தென்பகுதி இனவாதிகள் குர லெழுப்புகின்றனர். புலிகளின் பிரச்சனையை இராணுவ ரீதியாகவும், இனப்பிரச்சனையை அரசியல் ரீதியாகவும் தீர்த்துக்கொள்ளவேண்டும் என்று, தமது இனவெறிக்கு காரணம் கற்பிக்கின்றனர். தமிழ் மக்களினுடைய தேசவிடு தலைப் போராட்டம் ஆயுதபோராட்டமாக முகிழ்ந்த காலத் தில், அதனை "பயங்கரவாதம்" எனப் பெயர்சூட்டி, அப் " பயங்கரவாதத்தை" பூண்டோடு ஒழிப்பதற்காக, 1978 ம் ஆண்டு, பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்காவை சிங்கள இன வாத அரசு வடக்கிற்கு அனுப்பிவைத்தது.

பதின்நான்கு வருடங்கள் கழிந்த நிலையில், சிங்களப் படை தமிழீழத்தின் பெரும்பகுதியில் காலடி எடுத்து வைக்கமுடி யாதவகையில், விடுத்தலைப் போராட்டம் மக்கள் மயப்படுத் தப்பட்ட நிலையில், சிங்கள இனவாதம் தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்தை "பயங்கரவாதம்" என்றே இன்றும் பார்க்கின்றது. தமிழ் மக்களினுடைய பிரச்ச னையை தீர்த்து வைக்க தென்பகுதியினர் இன்றும் தயாரா யில்லை என்பதையே இது தெட்டத் தெளிவாகக் காட்டுகின் றது.

தமிழ் மக்கள் தமது உரிமைகளை, மீட்கும்வரை தொடர்ந்து போராடவே செய்வர் அதேவேளை, தமிழ் மக்களினுடைய போராட்டத்தை, பயங்கரவாதம் எனப் பிரச்சாரம் செய்து, அதனை நசுக்கவே இனவாதஅரசு இறுதிவரை முயற்சிக் கும். சுதந்திரத்துக்காகப் போராடி அதனை வெற்றி கொண்ட, ஒவ்வொரு தேசிய இனங்களும் இத்தகைய கசப்பான, கடுமையான அத்தியாயங்களைக் கடந்தே தமது சுதந்திரத்தை உறுதிப்படுத்திக்கொண்டன. இந்த வரலாற்று உண்மைகளைச் சுமந்து, தமிழீழம் தன் சுதந்திரத்தைத் தேடி வீறுகொண்டு நிற்கின்றது. அடக்க அடக்க, கிளர்ந் தெழுந்து, நிமிர்ந்து நிற்கின்ற தமிழ் தேசிய இனத்தின் உணர்வுகளை புரிந்து கொள்ளாத, அத் தேசிய இனத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்பாதநிலையில் சிங்கள இனவாத சக்திகள் இருக்கும் வரை "அமைதி" என்பது, கானல்நீராக, வெறும் கோசமாகவே இருக்கும். ■

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

### வானதியின் கவிதைத் தொகுப்பிலிருந்து

பெண்ணடிமைப் புயலால்,
அடுப்படியில்
அகதியாகி
தீயோடு
மௌன யுத்தம் நடத்துபவளே,
புறப்பட்டு வா!

ஊமை கண்ட கனவு போல
உன் உள்ளத்து
உணர்வுகளும்
ஊமையாகும் போது,
உன்னைக் குட்டுபவர்கள்
குட்டக் குட்ட,
நீயும்
குனிந்து, குனிந்து
குசினிக்குள்ளேயே
குமுறிக் கொண்டிருப்பாய்!

எம் இதயம் நேசிக்கும்
தேசத்து விடுதலை
எமக்கெட்டும் போது,
அங்கே,
பெண்ணடிமைக்கு
சமாதி கட்டப்படும்!
சமுதாயத்தின்
பிற்போக்கு சிந்தனைகளுக்கு,
புதைகுழி தோண்டப்படும்!

நாளைய
இந்த எழுச்சிக்காக,
இன்று நீ
எழுந்து வா!
அதோ பார்.....
உன்னை நோக்கி
துப்பாக்கியை நீட்டியபடி,
இரத்த வெள்ளத்தில்
உன் உடன்பிறப்பு.
பிடித்துக் கொள்
அவள் ஆயுதத்தை!
பின்பற்று
அவள் சுவடுகளை!

# வானதியின் கவிதைகள்

## - ஒரு ஆய்வு -

அந்நாளில் படைமுகத்தில் குனில் கொண்டு முரசறைந்து போர்ப்பாட்டுப் பாடிக் கொண்டு உடன் செல்லும் பாணனின் பாட்டினால் உணர்வுற்று உந்தி முன்னேறும் மறவீரர்கள் போன்றே வானதியின் பாடல்களைப் பாடிக் கொண்டோ மனதில் நினைத்துக் கொண்டோ முன்னேறும் வேங்கை வீரர்கள் பலர் அவர்களுக்கு உந்து சக்தியையும் நெஞ்சில் அஞ்சா மையையும் வீரத்தையும் வழங்கி மாசற்ற தலைவனின் வழியில் நிற்க ஒரு காரணமாய் அமைந்ததும் வானதியின் பாடல்கள்.

மலைகளையும், கடல்களையும் காடுகளையும் மானையும் மயிலையும் பாடாது பாசறைகளில் தேங்கி நிறைந்த வீரம். அவலம், இன்பம் உறுதி ஆகிய மெய்ப் பாடுகளைப்பாடி தன்னையும் தன்னைச் சேர்ந்தவர்களையும் எல்லோரையும் ஒன்று படுத்திய தன்மை இவரது பாடல்களுக்கு உண்டு. குண்டுகளுக்கும் துப்பாக்கிச் சன்னங்களுக்குமிடையே நுழைந்து மறப் போர் புரியும் இளைஞர்களுக்கு உணர்ச்சிதரும் யதார்த்த கவிதைகளின் வரிசையில் வானதியின் கவிதைகளும் சேரும்.

தலைவன் மேல் ஏற்பட்ட பற்றும் பாசமும் அவனால் ஊட்டி வளர்க்கப்பட்ட வீரமும் அவர்காட்டிய பரிவும் வானதியை கவிஞராக மட்டுமல்ல சிறந்த வீராங்கனையாகவும் ஆக்கியுள்ளது என்பதை அவரது இக்கவிதை தொகுதியின் பற்பல இடங்களில் காணலாம்.

வாலாற்றை வழிகாட்டியாக வரித்துக் கொண்டவன் - இன்று ஓர் வரலாற்றிற்கே வழியாகிவிட்டான். அச்சத் துக்குக்கூட இவனிடம் அச்சம் அதனால் (அது) இவனை அண்டியதே இல்லை.

என்பன போன்ற வரிகளிலுள்ள எதார்த்தங்களைப் புரிந்து கொள்ளல் யாவருக்கும் எளிதே.

இவை போலவே "இல்வாழ்க்கை இன்று இல்லாதவர்களுக்கு இல்லை" என்ற வரிகளும் இலட்சியப்பசி இவளுக்கு இருந்ததால் சீரணிக்க முடியாத உணர்வுகளைக் கூட சீரணிக்க பழகிக் கொண்டவள் என்பன போன்ற உண்மைகள் கவிதையின் எழுச்சிக்கும் எதார்த்தத்துக்கும் எடுத்துக் காட்டுகளாம்.

தன் உடன் வீரர்களின் காவின் போது இரங்கியதோடன்றி சோர்ந்துவிடாமல் இலட்சியத்தை நோக்கி ஒவ்வொரு அடியையும் முன்னெடுத்து வைத்ததுடன் மற்றையோரையும் வழி நடத்திச் செல்லும் ஆற்றலையும் அவளின் ஒவ்வொரு பாடல்களின் கருத்தும் பெற்றுள்ளன.

எனது பேனாவின் நினைவுகளின் நிகழ்காலம் நிகழ்வுகளின் எதிர்காலம்.

இத்தொடர்கள் கவிஞரின் பெருமைக்கும் நன்றி அறிதலுக்கும் உரியவையாகும்.

என்றோ ஒரு நாள் தமிழீழ விடுதலை பெற்ற போது அதற்கு நான் கொடுத்த பெறுமதி என்ன என்று கணக்குப் பார்ப்போமல்லவா? அது விருதுகளின் பெறுமதி தானே. இறுதியாக இனிவருவோர்க்கும் அவள் கதவு அடைத்து விடலின்றி தொடருங்கள் என்ற பாணியில் எழுதாத கவிதை எல்லோருக்கும் வழிகாட்டுவதாகும். இந்நூல் சமகால சரித்திரமாகவும் பழங்காலப் பாசறைப் பாடல்களாகவும் நின்று விளங்கும்.

- தில்லைச்சிவன் -

ஆனையிறவு சண்டையில் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட கப்டன். வானதியின் கவிதைத் தொகுப்பு அண்மையில் தமிழீழத்தில் வெளியிடப்பட்டது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# முரண்பாடுகளும் இணைந்து செயற்படுதலும்

திலீபன்

"கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் சில தமிழ் குழுக்கள் வெளியிடும் அறிக்கைகளை நோக்கும் போது, சிறீலங்கா அரசாங்கம் தனது இனப்படுகொலையினைத் தமிழர்களைக் கொண்டே நியாயப் படுத்த முயல்கிறது என்பது தெளிவாகிறது."

"புலம் பெயர்ந்த தமிழர் சமூகத்தின் மத்தியிலிருந்து வெளிவரும் சில பத்திரிகைகள், சஞ்சிகைகளை நோக்கும் போது மிகவும் கவலையாக இருக்கிறது. தமிழீழ மக்களின் எதிரி விடுதலைப் புலிகள் தான் என இவர்கள் கருதுவதுபோல் தோன்றுகிறது. இந்நிலையில் இருந்து இவர்கள் விடுபடவேண்டும்."

"தமிழீழ விடுதலையில் உணர்வு பூர்வமான ஈடுபாடு கொண்ட சிலர், விடுதலைப் புலிகளுடன் உள்ள முரண்பாடுகள் காரணமாகவோ அல்லது தப்பபிப்பிராயங்கள் காரணமாகவோ போராட்டத்திலிருந்து அந்நியமாகிச் செல்கின்றனர். இவர்களைப் போராட்டத்திற்கு எதிரான சக்திகள் பயன்படுத்த முயல்கின்றன. இச் சக்திகளின் பிடியில் இவர்களை சிக்க விடாமல் போராட்டத்தின் பக்கம் இணைக்க வேண்டும்."

இவை அண்மைக் காலங்களில் நான் சந்தித்த மூவர் முன் வைத்த கருத்துக்களாகும்.

இம் மூன்று கருத்துக்களிலும் குறிப்பிடப்பட்டோரில் முதற் பிரிவினர் எதிரியுடன் இணைந்து நின்று தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குத் துரோகம் இழைப்பவர்கள்.

இரண்டாவது பிரிவினர், தமது புலி எதிர்ப்பு வாதம் காரணமாக தமிழீழ மக்களின் எதிரி யார் என்பதனை வரையறை செய்து கொள்வதில் (துரோக நிலைப்பாடு காரணமாகவோ, அல்லது தெளிவற்ற தன்மையினாலோ) தடம் புரண்டவர்கள்.

**தமிழ்த் தேசிய இனத்தினை, ஒரு சிறுபான்மை இனக்குழு எனக் குறுக்கியும், தமிழர் தாயகம் என்று ஒன்றே இல்லை என்று வாதிட்டும், தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் அல்லர் என்ற கருத்துக்களை வெளியிட்டும், சிங்கள பேரின வாதத்தை நியாயப்படுத்தும் வகையில் சிங்கள புத்திஜீவிகள் கருத்தியல் தாக்குதலை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.**

மூன்றாவது பிரிவினர், சில முரண்பாடுகளாலோ, அல்லது தப்பபிப்பிராயங்களினாலோ போராட்டத்துடன் இணையாமல் நிற்பவர்கள். அதே வேளை எதிரியின் பிடியிலும் இவர்கள் சிக்கிக் கொள்ளவில்லை.

இம் மூன்றாவது பிரிவினர் தொடர்பான சில கருத்துக்களை இங்கு நோக்குவோம்.

## எதிரிக்கு வாய்ப்பு

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் எம்மால் பயன்படுத்தக் கூடிய சகல வளங்களையும் நாம் பயன்படுத்தாவிடின் அது எதிரிக்கு வாய்ப்பளிப்பதாகவே அமைந்துவிடும்.

இதனால், தமிழீழ விடுதலைப் போராட்டத்தினைத் தலைமைதாங்கி நடத்திச் செல்லும் விடுதலைப் புலிகளுடனான சில முரண்பாடுகளையோ அல்லது தப்பவிப்பிராயங்களையோ முதன்மைப்படுத்தி, விடுதலைப் போராட்டத்தில் இருந்து அந்நியப்பட்டு நிற்பது எதிரிக்கு ஏதோ ஒருவகையில் சாதகமாகிப் போகின்றது என்பதனை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அதே சமயம், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக இணைக்கக்கூடிய சகல சக்திகளையும் இணைத்துச் செல்ல வேண்டிய கடமை தமிழீழத் தேசியத் தலைமைக்கு உண்டு. அந்த வகையில் போராட்டத்துக்கு உணர்வு பூர்வமாகப் பங்களிக்கக் கூடியவர்களை இணைத்துக் கொள்வதில் விடுதலைப் புலிகள் அக்கறை கொண்டுள்ளனர்.

## நடைமுறைச் சிக்கல்கள்

விடுதலைப் புலிகளுடன் முரண்பாடுகளோ, தப்பவிப்பிராயங்களோ கொண்டவர்களை எப்படி விடுதலைப் புலிகளுடன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



இணைத்து இயங்க வைப்பது என்பதில் நடைமுறைச் சிக்கல்கள் எழுகின்றன. இவர்களும் உடனடியாக இணைத்து செயற்பட முன்வரப்போவதில்லை.

ஒரு புரிந்துணர்வு ஏற்படாத நிலையில் முரண்பாடுகளையோ தப்பபிப்பிராயங்களையோ பேசித் தீர்ப்பதும் நடைமுறைச் சாத்தியமற்றதாகும்.

இந்நிலையில், விடுதலைப் புலிகளுக்கும் இவர்களுக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தக்கூடிய தளம் தமிழீழ விடுதலைப் போராட்டம் என்னும் தளம்தான்.

இதனால், இன்று போராட்டத்தில் இருந்து அன்னியப்பட்டு நிற்போர் தமிழீழ விடுதலைப் போராட்டம் என்ற தளத்தில் உழைக்க முன்வரவேண்டும்.

## எவ்வாறு செயற்படுவது

தமிழீழ விடுதலைக்காக உழைத்தல் என்னும்போது, அதனை எப்படிச் செய்வது என்னும் பிரச்சனை எழலாம்.

விடுதலைப் புலிகளின் சர்வதேசக் கிளைகளுடன் இணைந்து செயற்படுவதில் இருதரப்பிலும் சில சிக்கல்கள் இருப்பதனால், ஒரு பொதுத் தளத்தில் நின்று இவர்கள் செயற்பட முடியும்.

இன்று, சிங்களப் பேரினவாதம் தமிழ்த் தேசிய இனத்தின் சகல அரசியல் தகைமைகளையும் நிராகரிக்கப் பார்க்கின்றது. ஒடுக்கு முறைகளால் மட்டுமல்ல, கருத்தியல் முனைகளிலும் தமிழ்த் தேசிய இனத்திற்கு எதிரான தாக்குதல்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளை நோக்கும்போது இவ் உண்மை நன்கு புலப்படும்.

தமிழ்த் தேசிய இனத்தினை, ஒரு சிறுபான்மை இனக்குழு எனக் குறுக்கியும், தமிழர் தாயகம் என்று ஒன்றே இல்லை என்று வாதிட்டும், தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் அல்லர் என்ற கருத்துக்களை வெளியிட்டும், சிங்கள பேரினவாதத்தை நியாயப்படுத்தும் வகையில் சிங்கள புத்திஜீவிகள் கருத்தியல் தாக்குதலை நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

இக் கருத்தியல் தாக்குதலை எதிர்கொள்வது, அனைத்துத் தமிழ் மக்களின் முன்னாலும் உள்ள பணியாகும். இது விடுதலைப் புலிகளுக்கு மட்டுமே உரிய பணியல்ல. இக்கருத்தியல் தாக்குதலை எதிர்கொண்டு, தமிழ்த் தேசிய இனத்தின் தகைமைகளையும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மைகளையும் எடுத்துரைக்கும் பணியில் இவர்கள் ஈடுபடமுடியும்.

சிறீலங்கா அரசால் மேற்கொள்ளப்படும் இனப்படுகொலையினை, சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்தி, சிறீலங்கா அரசின்மீது சர்வதேச அழுத்தங்களை ஏற்படுத்துவதற்காகவும் இவர்கள் செயற்படலாம். தமிழீழத்தில் எதிரியின் கொடூரமான ஒடுக்குமுறைகளினால் அகதிகளாக்கப்பட்ட மக்களின் துயர் துடைப்பதற்கான பணிகளிலும் இவர்கள் ஈடுபடலாம்.

## புரிந்துணர்வு

இவ்வாறு, தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை பலப்படுத்தக்கூடிய பணிகளைச் செய்துவரும்போது, விடுதலைப் புலிகளுக்கும் இவர்களுக்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஏற்படும். இப்புரிந்துணர்வின் அடிப்படையில் தொடர்ந்து செயற்படும்போது இருதரப்பிற்கும் இடையே ஒரு நெருக்கமும் ஏற்படும்.

இப்புரிந்துணர்வும் நெருக்கமும் வளர்ந்துவரும்போது விடுதலைப் புலிகள் தொடர்பான முரண்பாடுகளோ, தப்பபிப்பிராயங்களோ அகலும் சூழல் உருவாகும். தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான ஆரோக்கியமான கருத்துப்பரிமாறலுக்கு இது வழிவகுக்கும். இதைவிடுத்து, போராட்டத்தில் இருந்து அந்நியமாகிப்போதல் எவருக்கும் எந்தவகையிலும் பயன்தரப்போவதில்லை.

இவர்கள் இதை உணர்ந்து செயற்படுவார்களா? ■



தமிழர் வரலாற்றிலேயே நடைபெறாத புரட்சியொன்று தமிழீழத்தில் நடைபெற்றிருக்கின்றது. காலங்காலமாக அடுக்களையில் அடங்கிப்போயிருந்த பெண்ணினம் இன்று ஆயுதமேந்தி நிற்கிறது; சீருடை தரித்து நிற்கிறது; எதிரியை களத்தில் சந்தித்து நிற்கிறது. காலங்காலமாக தூங்கிக்கிடந்த பெண்ணினம் இன்று விழிப்படைந்து எமது போராட்டத்தின் ஒரு புரட்சிகர சக்தியாக எழுச்சிகொண்டு நிற்கிறது. வீரத்திலும், தியாகத்திலும், விடுதலை உணர்விலும் ஆண்களுக்கு எவ்வகையிலும் சளைத்தவர்கள் இல்லை என்பதை எமது பெண் போராளிகள் தமது வீரசாதனைகள் மூலம் நிருபித்துக்காட்டியுள்ளனர்.

தலைவர் வே. பிரபாகரன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# கவிதைக் களம்

உறுதியின்
உறைவிடத்தில்
உறங்கிக் கொண்டிருக்கும்
இனிய நண்பர்களே!

உங்களின்
மன எழுச்சியை -
விடுதலைத் தாகத்தை -
இலட்சிய வேட்கையை -
தியாக சிந்தையை -
உறுதியின் உரத்தை -
தேசப்பற்றை -

எங்கள்
ஆன்மாக்களில் சுமக்க
உங்கள்
கல்லறைகளின் முன்னால்
உறுதி எடுத்துக் கொள்கிறோம்.

நாங்கள் -
இலட்சியத்துக்காக
உயிரைக் கொடுக்கத்
துணிந்து விட்டவர்கள்;
உயிர்களுக்காக
இலட்சியத்தை
விடக்கூடியவர்களல்ல.

பாசத்துக்குரிய
தேசத்தின் புதல்வர்களே!
நம்பிக்கையோடு
துயில் கொள்ளுங்கள் -

எமக்கென
ஒரு தேசம்
பிறக்கின்ற வரையில்
துவக்குகளோடு
நாங்கள்
எழுவோம்.

- ஈழத்திலிருந்து -

## அம்மா

பசித்துயரம் போக்க
அம்மாவின் மனதைப் போல்
பாளம் பாளமாய் வெடித்த வயலில்
கொட்டிய நெல் மணி பொறுக்கி,

கண்ணறைகள் மறைக்க நூல்கொண்டு
கண்ணீராலும் இழைத்து,
அம்மா உடுத்தும் சேலை
அப்பாவின் நினைவாக
அது ஒன்று மட்டும்தான்.

தாயவள் தனக்கு உரம் என்று
பெற்ற பிள்ளைகளும்
நாட்டுக்கு ஒன்றாய்

ஓலைக் குடிலுக்குள் முடங்கும்
அவள் உயிரைக் குடித்துவிட
ஒரு விமானம்,
ஒரு குண்டுச் சிதறல்
அல்லது அவளது பட்டினி போதும்.

ஒரு சோகமான பாடலுக்கு
தாளத் துடிப்பாய்
இயங்கும் அவள் இதயம்
நின்றுவிடும்....
எனினும்
போரினில் போன மகன்
பேரைச் சொல்லி
பெருமையுடன்
அலையெனவே எழும்
மக்களுடன் அவளும்.

- சுபா -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

- கொ. றோ. கொன்ஸ்ரன்ரைன்

# நவீன ஓவியம்

## - ஓர் கண்ணோட்டம்



ஜெமினி றோயின் இயேசு

முன்பெல்லாம் நம்மவர் நவீன ஓவியத்தைப் பற்றி அவ்வளவாக அலட்டிக் கொள்வதில்லை. ஓவியத்துறையில் இருந்தவர்கள்கூட அதன் பயன்பாடு என்ன? உண்மையில் நவீன ஓவியம் தேவையானதுதானா? இப்படிப்பல புதிர்களைப் போட்டு அங்கலாய்த்து வந்தார்கள். ஆனால் இன்றோ நிலைமை வேறு. பலர் நவீன ஓவியத்தைப் பற்றிச் சிந்திக்கின்றார்கள். அதன்பால் நாட்டம் கொள்கின்றார்கள். அதனை இரசிக்க விழைகின்றார்கள். இதனால்தான் முன்னெப்பொழுதும் இல்லாதபடி இப்பொழுது நவீன ஓவியத்துறை பெரும் சவால்களையும், ஆபத்துக்களையும் எதிர்நோக்க வேண்டியதாயிருக்கின்றது.

விளங்காததை விளங்கியது போல் பாவனை பண்ணும் தன்மையும், நவீன ஓவியம் எனக் கருதப்படுவது எதனையும் புகழுந் தன்மையும் அதிகரித்துள்ளது. நவீன ஓவியர்களாக கருதப்படுபவர்கள் மத்தியிலும், உண்மையான ஓர் ஈடுபாடில்லாமல், அடிப்படைகளில் நன்கு வேரூன்றாது, எதையாவது நவீனமாகச் செய்யவேண்டும் என்ற அவாவினால் தாம் செய்வது எல்லாவற்றையும் நவீன ஓவியமாகக் கருதும் பாங்கும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

இப்படியான போக்கு நவீன ஓவியம் பற்றிய ஆழமான கண்ணோட்டங்களையும், பல்வேறு நிலைப்பட்ட கண்ணோட்டங்களுக்கூடாக எழும் கருத்து முரண்பாடுகளையும், இந்த முரண்பாடுகள் வாயிலாக ஏற்படும் விஸ்தாரமான நோக்குப் பரப்பினையும் கோரி நிற்பதாகவே தோன்றுகின்றது.

ஓவியக்கலை ஆரம்பகாலங்களில் மதத்தை மருவியே வளர்ந்து வந்தது. இறைவழிபாட்டிற்கான ஊடகமாகவும், சமயக்கருத்துக்களைச் சித்தரிப்பதற்காகவும் ஓவியம் பயன்பட்டு வந்தது. காலப்போக்கில் மதமும், மத ஸ்தாபனங்களும் கலைஞனின் வெளிப்பாட்டில், படைப்பாற்றலில் ஏற்படுத்தி நிற்கும் கட்டுப்பாடுகளை, நிர்ப்பந்தங்களைக் கலைஞர்கள் உணரலானார்கள். இதனால் ஓவியக்கலை சுயாதீனமாக இருக்க வேண்டியதின் அவசியம் புலப்படுத்தப்பட்டது. அத்துடன் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புகைப்படக் கலையின் வருகை ஏற்படுத்திய தாக்கமும் ஓவியக்கலை நவீனத்துவமடைய வேண்டியதன் தேவையை மேலும் வலுப்பெற வைத்தது.

நவீன ஓவியக்கலை இயக்கமானது, கவிஞன் தான் வழக்கு முறையாகப் பெறும் அனுபவத்தை அவனது யதார்த்த அல்லது கற்பனையால் உணரப்பட்ட கோடுகள் சமநிலைகள் போன்ற பரிமாணங்களை ஸ்தூலமான எண்ணக் குறியீடாகச் சேர்த்தல் மூலம், ஒரு ஒழுங்கமைப்புடன் கூடிய, நிச்சயத்தன்மையுடைய, ஒரு முழுமையான வடிவாகப் பிரதிபலிப்பதை அடிப்படையாகக் கொண்டது.

நவீன ஓவியம் அடிப்படையில் சுயாதீனமானது, அது இன்னொன்றை அண்டி நிற்பதில்லை. அதன் இருப்பிற்கு அது மதத்தினதோ, ஆசிரியரினதோ நியாயப்படுத்தலை வேண்டி நிற்பதில்லை. ஆக நவீன ஓவியம் தனது இருப்பிற்கான தேவையை, அர்த்தத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. ஓவியம் இறைவழிபாட்டிற்கோ, அரசியல் பிரச்சாரத்திற்கோ பயன் படுகையில் நவீன ஓவியம் என்ற நோக்கில் அதன் பெறுமானம் குறைகிறது.

இந்த ஓவியம் விளங்கவில்லையே? இந்த ஓவியம் எதைக் கூறுகின்றது. இப்படிப்பட்ட அங்கலாய்ப்புகள் இன்று அனேகரிடம் காணப்படுகின்றது. இவை பயன்பாட்டு வாதத்தின் அடிப்படையில் எழும் கேள்விகள். நவீன ஓவியம் அடிப்படையில் ஒரு பயனை, ஒரு விளைவை நோக்காக வைத்துப் படைக்கப் படுவதில்லை. அது ஒரு கலைஞனின் சுயமான வெளிப்பாடு. இந்த வெளிப்பாட்டினை பார்வையாளன் ஓவியத்தில் இனங்காணும் போதுதான் ரசனை ஆரம்பமாகின்றது. இந்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தவித இனங்காணலை, ஒன்றித்தலை ஏற்படுத்த பல கூறுகள் காரணமாக அமைகின்றன. இவற்றை மூன்று தளங்களில் அணுகலாம்.

1. அழகுணர்வுத் தளம்.
2. அறிவியற்தளம்
3. உணர்வுத் தளம்



பிக்காசோவின் ஓவியம்

ஒரு ஓவியத்தைப் பார்க்கிறோம். முதலில் எமது கண்களுக்குப் படுவது என்ன? அதன் உருவங்கள், நிறங்கள், ரேகைகள். இவை தான் ஓவியத்தின் அடிப்படை. இவை ஒவ்வொன்றும் தன்னகத்தேயும், இணைந்தும் சம நிலை, சீர்ப்பிரமாணம், ஒத்திசைவு போன்ற இன்னோரன்ன பரிமாணங்களை ஏற்படுத்தும். இவற்றின் கட்புலத் தூண்டுதலே அழகுணர்வைத் தருகின்றது. இந்தத் தூண்டுதல் இவற்றின் பல்லேறு பண்புகளில் தங்கியுள்ளது. உதாரணமாக, நிறத்தைக் கருதுவோமேயானால் ஒரு நிறத்திற்கு ஒரு குறித்த அலை நீளம் இருக்கிறது. ஒரு குறித்த ஒளிர்வுத் தன்மை இருக்கிறது. இப்படியாக ஒவ்வொரு கூறுக்கும் பல்வேறு பண்புகள் உண்டு. இங்கே முக்கியமான விடயம் என்னவெனில் இப்பண்புகளில் பெரும்பாலானவை விஞ்ஞான முறையில் கணிக்கப்படக்கூடியவை. உதாரணமாக, நிறத்தினது அலை நீளம், அதன் ஒளிர்வுத் தன்மை, ஒரு ரேகையினது நீளம், அதன் வளைவு இவையெல்லாம் கணிக்கப்படகூடியவை.

ஒரு ஓவியன் தனது அனுபவம், ரசனை என்பவற்றிற்கேற்ப இந்த உருவங்கள், நிறங்கள், ரேகைகள் என்பவற்றைப் பயன்படுத்துகின்றான். இவற்றை அழகுணர்வைத் தரும் விதத்தில் அதாவது சம நிலை குழம்பாது சீர்ப்பிரமாணத்துடன் ஒத்திசையும் வண்ணம் அவன் கையாள்கின்றான். இதற்கு அவனிடம் இயல்பாகவே ஓர் ஆற்றல் உண்டு. இந்த அடிப்படை ஆற்றல் ஓவியம் மீதான அவனது பரிச்சயத்துடனும், பிரக்ஞைபூர்வ வளர்ச்சியுடனும் விஸ்தாரம் அடைகிறது.



ஜோர்ச் கீற்றின் ராதா கிருஷ்ணா

ஓவியத்தில் ஒரு அறிவியல் ரீதியான தளமும் இருக்கும். ஆனால் இத்தளத்தின் செல்வாக்கு அதிகரிக்க அதிகரிக்க ஓவியத்தின் கலைப்பரிமாணம் குறைகிறது. இத்தளம் பிரதானமாக ஓவியனின் நோக்கு நிலையிலேயே இருக்கிறது. இருப்பினும் ஓவியத்தில் அது பிரதிபலிப்பது தவிர்க்க முடியாததாக அமைகிறது. அறிவியற் தளம் ஓங்கி நிற்கும் ஓவியங்களில் ஓவியன் ஒரு நோக்கை வைத்தே செயற்படுகிறான். அவன் தனது ஓவியப் பாணியில் அல்லது பார்வையாளனில் வலிந்து ஒரு மாற்றத்தை ஏற்படுத்திப் பார்க்கின்றான். இத்தளத்தின் செல்வாக்கு ஓவிய வரலாற்றில் கியூபிச முறையின் வருகையில் தெளிவாகக் காணலாம். இதனை ஒரு ஓவியனின் பரிமாண வளர்ச்சிப் போக்கின் இடை நிலைகளிலும் நாம் அவதானிக்கலாம். ஒரு ஓவியனின் வளர்ச்சிப் பாதையில், அவன் தனது முழுமையான வெளிப்பாட்டுப் பாணியை அடையுமுன்னர், எத்தனையோ பாணிகளில் பரிசோதனை செய்து பார்க்கின்றான். இவை அவனது சுயமான வெளிப்பாடுகள் அல்ல. ஓர் அறிவார்ந்த தேடல், இங்கே அறிவியல் தளமே மேலோங்கி நிற்கும்.

உணர்வுத் தளம் ஓவியத்தின் மிகவும் முக்கியமான ஓர் தளம். ஓவியத்தில் உணர்வு வெளிப்பாடு எத்தன்மையானதாக இருக்கவேண்டும்? ஒரு சிக்கலான கேள்விதான். ஓர் உதாரணத்தைப் பார்ப்போம். ஒரு பெண் அழுதுகொண்டிருக்கின்றாள். இதைச் சித்தரிக்கும் ஓர் ஓவியம். இங்கே அடிப்படை உணர்வு சோகம். இங்கே ஓவியன் எதைச் செய்ய முற்படுகிறான்? ஓவியன் பார்வையாளனில் வலிந்து ஓர் உணர்வைக் கிளப்பிட முயல்கிறான். இங்கே ஓவியத்தில் பிரச்சாரத்தனம் தெரிகிறது. விளக்கப்படத்தன்மை மேலோங்கி நிற்கிறது. கலைப் பெறுமானம் குறைகிறது. மாறாக ஓவியனின் உணர்வுத் தளமும் தூரிகை அசைவும், அவனது கோடுகளும், அவனது நிறத் தேர்வும் எப்பொழுது ஒத்திசைக்கின்றனவோ அப்பொழுதுதான் அவன் உயர்க் கலைப்படைப்பொன்றை படைக்கின்றான். அப்பொழுது ஓவியம் முழுமையாக முகாரி பாடும். ஓவியம் எங்கும் சோகம் இழையோடி இருக்கும். இதைப் பார்க்கும் பொழுது பார்வையாளனின் சுருதியும் தாழ்கிறது. அவனும் சோகத் தளத்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


திற்கு இறங்குகின்றான். ஓவியனின் சோக உணர்வுடன் தன்னை இனம் காண்கின்றான். இது தான் உயர் ஓவியத்தின் உண்மையான உணர்வுப் பரிமாற்றம்.

ஈயூஜின் வெறன் (Eugene Veron 1825-1889) இரு வித உணர்வு வெளிப்பாடுகளைப் பற்றிக் கூறுகின்றார். ஒன்று, கலைஞன் தான் நேரடியாகப் பெறும் அனுபவத்தின் வாயிலாக எழுவது. மற்றையது, பிரதானமாக வேறு ஒருவரின் அனுபவமாக அமைவது. இங்கே கலைஞன் மறைமுகமாகப் பாதிக்கப்படுகின்றான்.

தமிழில் கூறுவார்கள் "அழுவாரெல்லாம் தனக்கழுவார் திருவர் பெண்டிலுக்கு யார் அழுவார்" என்று. இத்தொடர் அடிப்படையாக ஒரு இழப்பைப் பற்றிக் கூறுகின்றது. இங்கே எல்லோரும் துக்கத்தின் அடையாளமாகக் கண்ணீர் சிந்துகிறார்கள். இருப்பினும் அத் துன்பம் எத்தகையது? ஒவ்வொருவரின் மனதிலும் அது ஏற்படுத்திய தாக்கம் எத்தகையது? பலரின் சொந்த வாழ்வின் அனுபவங்களுக்கு இந்த நிகழ்ச்சி ஒரு குறியீடாக அமைந்து சோகத்தைக் கிளப்பியிருக்கலாம். திருவர் கூட இந்த இழப்பைப் பல்வேறு பரிமாணங்களில் உணர்ந்திருக்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாக பிரதியுபகாரம் கருதாத உண்மையான, ஒரு மனித நிலைப்பட்ட உறவின் இழப்பிற்காக இந்த சோகம் எழுந்திருக்கலாம். ஆக இவற்றில் எது உண்மைத் தன்மையானது; இவற்றில் எந்த அனுபவ உணர்வு நிலை வெளிப்பாடாக வரவேண்டும் என்பதே கேள்வி.

உண்மையான மனித நிலைப்பட்ட உறவின் இழப்பு ஏற்படுத்தும் தாக்கமே உண்மையானது. ஓவியத்தில் இது பிரதிபலிக்கப்படும் பட்சத்திலேயே அது உயர்கலைப் படைப்பாகக் கருதப்பட வேண்டும். இத்தன்மையான வெளிப்பாட்டிற்கு

## கச்சைக்கட்டு - தேரோக்களின் சமாதான முன்னெடுப்பு

ஒரு சிங்கள பௌத்தன் என்ற ரீதியில் அமைச்சர் தொண்டமானின் சமாதான யோசனைகளை நான் முற்றுமுழுதாக எதிர்க்கிறேன்.

- ஸ்ரீ விபஸ்சி தேரோ -

தொண்டமானின் யாழ்விஜயம் நாட்டின் எதிர்காலத்தைப் பொறுத்தவரை மிக முக்கியம் வாய்ந்த ஒன்றாகும். எனவே மகாசங்கத் தலைவர்கள் மௌனமாயிருக்க முடியாது. தொண்டாவின் ஆலோசனைகள் ஏற்கப்படும் பட்சத்தில், அதன் விளைவுகுறித்து ஜனாதிபதி சிந்திக்கவில்லையா? முடிவில் இனவாதமே தலைதூக்கும்.

-தர்மித்தி போலரத்ன சாரதேரோ-

மந்திரிசபையின் பொறுப்புக்களுக்கு மாறாகச் செயற்பட்ட அமைச்சர் தொண்டமானை, அமைச்சர் பதவியில் இருந்து உடன் நீக்கவேண்டும்.

-பல்லட்டரசுமண ஜோதி அநுநாயக்கதேரோ-

நாட்டில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் பயங்கரமான போரை முடிவுக்குக் கொண்டுவரவே முதலில் முக்கியத்துவம் அளிக்கவேண்டும். போர்முடியும்வரை சமாதானப்பேச்சு நிறுத்தப்படவேண்டும்.

- வல்பொல ராகுலதேரோ -



அரசு ஒன்றை நிறுவும்போது, தமிழினத்தின் ஆதரவின்றி நிறுவமுடியாது என்ற எண்ணத்தை இனி கைவிட்டுவிடவேண்டும்.

- மகாபோதி சங்கத்தலைவர் -

இனப்பிரச்சனைக்கு அரசியல்தீர்வு யோசனையை புலிகள் முன்வைத்தால், அதைப் பரிசீலிக்க நாம் தயாராக இருக்கின்றோம்.

- மல்வத்த பீடாதிபதி -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



நேரடி அனுபவம் இன்றியமை யாதது. இந்த நேரடி அனுபவப் பிரதிபலிப்பே ஓவியத்தில் இயல்பாக கவிதா லாவண்ணத் துடன் கூடிய கலைத்துவ உண் மையினை வெளிப்படுத்தும்.

உணர்வுகள் உணர்ந்து கொள் ளப்பட வேண்டியவை, உணர்த் தப்படவேண்டியவை. அவை விளங்கப்படுத்தப்பட முடியா தவை. அவற்றை புற அளவு ரீதியாக கணிக்க முடியாது. அவை எந்த ஒரு விஞ்ஞான கணிப்பீடுகளுக்கும் உட்படா தது. அவை அகத்திலிருந்து பிறப்பவை. இந்த இடத்தில் தான் ஓவியம் விஞ்ஞானத்தி லிருந்து அடிப்படைகளில் வேறுபடுகிறது.

பொதுவான உணர்வுகள் சோகம், மகிழ்ச்சி போன்று வகுக்கப்பட்டாலும், அவற்றை எமது சொந்த அனுபவங்களு டன் ஒப்பிட்டு விளங்கிக் கொண்டாலும், அவை ஒவ் வொன்றும் தம்முன் தாக்க அளவில் (degree) வேறுபடு கின்றன. எப்பொழுது ஒரு ஓவியன் இந்தத் தாக்க அளவு வேறுபாடுகளை தன் படைப்பு களில் வெளிப்படுத்துகின் றானோ அப்பொழுதுதான் அவன் உச்ச வெளிப்பாட்டுத் திறனில் படைக்கின்றான்.

அறிவியற்தளம், அழகுணர்வுத் தளம், உணர்வுத்தளம் என் பவை வெவ்வேறாக நோக்கப் பட்டாலும், இவை ஒரே ஓவி யத்தில் ஒன்றுக் கொன்று உறுதுணையாக அமையும்வண் ணம் கையாள்வது ஓவியனின் திறமையிலேயே தங்கியிருக்கின் றது. இவை ஓவியனின் சுய மான தேர்வுக்கு உட்பட்டது. இவற்றிற்குக் கொடுக்கப்படும் அழுத்தம் ஓவியனின் அனுப வம், மனநிலை போன்றவற் றைப் பொறுத்து வேறுபடுகிறது. அத்தடன் காலத்திற்கு காலம் கால நிகழ்வுகளுக்கேற்ப வெவ் வேறு தளங்கள் அழுத்தம் பெறுவதனையும் காணலாம். உதாரணமாக கேத்திர கணிதத் தின் வருகை ஏற்படுத்திய தாக் கம் கியூபிசத்தின் (Cubism) தோற்றத்திற்கு உந்துகோலாய் அமைந்தது. இதன் தாக்கம் ஓவியனைத் தான் காண்ப வற்றை கேத்திர கணிதப் பரி மாணங்களில் ஆராயவைத்தது. இதனை செசானா (Paul Cezanne 1839-1906) தனது நண் பர் ஒருவருக்கு எழுதிய கடிதத் தில் "இயற்கையில் காணப்ப டும் பொருட்கள் கேத்திரகணி தப் பரிமாணங்களில் நோக்கப் படலாம்" எனக் குறிப்பிடுகி றார். இங்கே அந்த அறிவியற் தளத்தின் செல்வாக்கினை நாம் காண்கிறோம்.

சமகால விஞ்ஞான வளர்ச் சியை நோக்குகையில் ஓவியத் துறைக்கு சவாலாக கணனி மானி வளர்ந்து வருவதைக் காணலாம். ஓவியத்தில் அழகு ணர்வை ஏற்படுத்தும் நிறம், கோடுகள், உருவங்கள் ஆகி யவற்றின் பண்புகள் கணிக்கப் படக்கூடியவையாக அமைவதே இந்தச் சவாலுக்கான முக்கிய காரணம். இக்கூறுகள் சம நிலை, சீர்ப்பிரமாணம் போன்ற இன்னோரன்ன பரிமாணங்க ளைப் பூர்த்தி செய்யும் வண் ணம் கணனிமானியினால் கையாளப்படலாம். அதே வேளை அறிவியற்தளமும் கணனிமானியினால் குறிப்பிடக் கூடிய அளவிற்குப் பயன்படுத் தப்படலாம். ஆக ஓவியத்தில் உணர்வுத்தளமும் அதனூடாக வெளிப்படும் அந்த மனிதத் தன்மை மிகுந்த கலையுமே முக்கியமாக அமைவதைக் காணலாம்.

ஒரு தரமான ஓவியம் ஓவிய னின் அளுமையை வெளிப்படுத் தும். அங்கே அவனது தனித் துவம் வெளிப்படும், இந்த வெளிப்பாடு எப்படிச் சாத்திய மாகின்றது? நாமும் எத்த னையோ தடவைகள் இயற் கையில் இருப்பவற்றை பிரதிப ண்ணப் பார்க்கின்றோம். நாம் வரைபவற்றிற்கும் அசலுக்கு மிடையில் நிறைய வேறுபாடு கள். ஆயினும் சிலரிடத்தில் பார்ப்பதை அப்படியே பிரதிபண் ணும் ஆற்றலுண்டு. இதைக் கலைஞர்கள் படிப்படியாக வளர்த்துக் கொள்கின்றார்கள். ஒரு சிறந்த ஓவியனின் வளர்ச் சிக்கு ஒரு ஓவியக் கல்லூரி கொடுக்கக் கூடியது ஏதாவது இருப்பின் அது அந்தப் படம் வரையும் (Draughtsmanship) பயிற்சியாகத்தான் இருக்க முடியும்.

இந்த அடிப்படையை வளர்த் துக் கொண்ட ஒரு ஓவியனால் தான் தனது தூரிகை அசைவு களிலும் தனது நிறத் தேர்வுக ளிலும் தனது உருவங்களிலும் தனது ஆளுமையை, தனது உணர்வுகளை இசைவுடன்

## சரண் - குறும்பு

நாம் புலிகள் இயக்க தலைமைப்பீடத்துடன் போர்தொடுத்து வருகின்றோம். சாதாரண போராளிகளுடன் அல்ல. சரணடைய விரும் பும் புலிகள் T. E. L. O முகாமில் வந்து சரண டையலாம்.

-T. E. L. O துண்டுப்பிரசுரம்-

புலி உறுப்பினர்களே! உங்கள் ஆயுதங்களை மேலே உயர்த்தியபடி அருகிலுள்ள இராணுவ முகாமுக்கு வந்து சரணடையுங்கள்; மன்னிப் பும், தகுந்த பாதுகாப்பும் வழங்கப்படும்.

-சிறீலங்காப்படை துண்டுப்பிரசுரம்-

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வெளிப்படுத்த முடியும். இந்தப் படம் வரையும் ஆற்றலை சிறந்த ஓவியர்கள் பல ஆண்டுகாலங்களுக்கு பயிற்சி செய்கிறார்கள். தத்ரூபப்பாணியில் இருந்து, படிப்படியாகத்தான் அருபப் பாணிக்குவருகிறார்கள். ஆனால் நமது இன்றைய இளம் ஓவியர்களில் அருபப்பாணிக்குத் தாவத் துடிக்கும் ஓர் அவதிப் போக்குக் காணப்படுகின்றது.

நவீன ஓவியத்தில் சிறப்பான அம்சம் ஒன்று உண்டு. இங்கே பார்வையாளனின் முக்கியத்துவம் உயர்த்தப்பட்டுள்ளது. ஈடுபாடற்ற ஓர் பார்வையாளனுக்கு நவீன ஓவியத்தில் இடமில்லை. நவீன ஓவியம் ஒரு மொழியினைப் போன்றது என்கிறார் பிக்காஸோ (Pablo Picasso 1881 -1973), அந்த மொழியுடன் பார்வையாளனுக்குப் பரிச்சயம் அவசியம். ஓவியம் ஒரு சர்வதேச மொழி. இருப்பினும் பிராந்திய ரீதியிலும், தேசரீதியிலும் சொல்வழக்கு, மொழிநடை வேறுபடுகின்றது. இதில்தான் தனித்துவம் பிறக்கின்றது. இதனை அறிந்துகொள்ள, புரிந்துகொள்ள ஒரு பார்வையாளனுக்கு ஒரு ஓவியனின் படைப்புக்களுடனும், தேசியரீதியிலான படைப்புக்களுடனும், பிராந்தியரீதியிலான படைப்புக்களுடனும், சர்வதேசரீதியிலான படைப்புக்களுடனும் பரிச்சயம் அவசியமாகின்றது.

இங்கே பார்வையாளனின் நோக்கு சுயாதீனமானதாக இருக்க வேண்டும். மேலைத்தேய, கீழைத்தேய சார்புநிலைகளின் பாதிப்பிலிருந்து அவன் விடுபட்டு சுயாதீனமாக ஓவியத்தை அணுக வேண்டும். அதேவேளை இன்னார் செய்தார் என்பதற்காக ஓவியம் பார்வையாளன்மேல் திணிக்கப் படக்கூடாது. படைப்பாளியின் ஊடாக படைப்பை அல்ல, படைப்பினூடாக படைப்பாளியைக் காணும் சுயமான நிலை பார்வையாளனுக்கு வழங்கப்பட வேண்டும்.

ஒரு பண்பட்ட பார்வையாளன் ஓவியத்தைக் காண்பதில்லை, அதில் அவன் ஓவியனைத்தான் தரிசிக்கின்றான்.

நவீன ஓவியம் அடிப்படையில் சுயாதீனமானது. இந்தச் சுயாதீனத் தன்மை ஓவியனிடத்தில் மட்டுமல்லாது பார்வையாளனிடத்திலும் வளரும்போதுதான் நவீன ஓவியம் ஒரு சிறந்த கலைவடிவாகப் பரிணமிக்க முடிகின்றது. ■



நொய்ந்த வீடு, நொய்ந்த கதவு, நொய்ந்த கூரை
நொய்ந்த மரம், நொய்ந்த உடல், நொய்ந்த உயிர்,
நொய்ந்த உள்ளம் - இவற்றைக் காற்றுத்தேவன்
புடைத்து நொறுக்கி விடுவான்.
சொன்னாலும் கேட்கமாட்டான்.

ஆதலால் மானிடரே வாருங்கள். வீடுகளைத் திண்
மையுறக் கட்டுவோம். கதவுகளை வலிமையுறச்
சேர்ப்போம். உடலை உறுதிகொள்ளப் பழகுவோம்.
உயிரை வலிமையுற நிறுத்துவோம்.
உள்ளத்தை உறுதி செய்வோம்,

-மகாகவி சி. சுப்ரமணியபாரதி-

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# முட்டுவாத நோய்க்கு மருந்து விரதமிருத்தல்

மருத்துவக் கலாநிதி
ந. சத்தியமூர்த்தி

விரதமிருத்தல் தமிழ் மக்க ளிடையே தொன்று தொட்டு இருந்து வரும் பழக்கமாகும். குறிப்பாக இந்துக்களும், இஸ்லாமியர்களும் தத்தமது மத நம்பிக்கையின் படி இதை மேற்கொண்டு வந் தாலும் வறியோரின் பசிப்பி ணியை எல்லோரும் அறிந்து கொள்ளவும், உடல் நோய்க ளிலிருந்தும் விடுதலை பெறவுமே பண்டைத் தமிழர் கள் உண்ணுநோன்பைக் கைக்கொண்டார்கள்

மேல்நாட்டவர்கள் ஆரம்ப காலத்தில் இதன் மகிமையை அறியாதிருந்தாலும், தற் போது ஆர்வத்துடன் ஆராட் சியிலீடுபட்டுள்ளார்கள் அண் மையில் நோர்வே நாட்டில் நடந்த ஓர் ஆய்வின் பயனாக விரதமிருந்து, சில குறிப் பிட்ட உணவு வகைகளை உண்பதன் மூலம் மூட்டுவாத நோயை (Rheumatoicl Arthr- itis) குணமாக்கலாம். எனத் தெரிய வந்துள்ளது.

ஓராண்டு காலம் நடைபெற்ற இவ்வாராட்சியில் தெரிவு செய்யப்பட்ட 27 நோயாளிகள் ஈடுபடுத்தப்பட்டார்கள். ஆரம்பகாலத்தில் பத்து நாட் கள் விரதம் இருக்கக்கேட் டுக் கொள்ளப்பட்டதுடன் உணவாக மூலிகைத் தேனீர், வெள்ளைப்பூண்டு கலந்த இரசம், கரட், உருளைக்கி ழங்கு, பீட்ருட் ஆகியன சேர்ந்த கஞ்சி, ஆகியன கொடுக்கப்பட்டன. பழங்கள் தவிர்க்கப்பட்டன. இதன் பின்னர் இரண்டு நாட்களுக் கொருதடவை, ஒவ்வொரு புதுவகை உணவு அளிக்கப் பட்டது. இவ்வுணவை உண்ட இரண்டு மணித்தி யாலம் முதல் அடுத்த 48 மணிநேரத்துக்குள் மூட்டு வலி, வீக்கம் ஏதாவது ஏற் பட்டால் குறிப்பிட்ட உணவு ஒரு வாரத்துக்குத் தவிர்க்கப் பட்டு பின்னர் மீண்டும் கொடுக்கப்பட்டு மேற்படி தொல்லைகள் தோன்றினால் முற்றாக அக்குறிப்பிட்ட உணவு தடைசெய்யப்பட்டது

முதல் மூன்று முதல் ஐந்து மாதம்வரை இறைச்சி, கோதுமை, முட்டை, மீன், பால் பண்டங்கள், சீனி, புளிப்புள்ள பழங்கள், உப்பு, கராம்பு போன்ற காரமுள்ள வாசனைத் திரவியங்கள், மது கலந்த பானங்கள், தேனீர், கோப்பி ஆகியன முற்றாகத் தவிர்க்கப்பட்டன

இதன் பின்னர் கோதுமை, பாலுணவு, ஆகியன மீண்டும் கொடுக்கப்பட்டு தொல்லை தராதநிலை பரிசீலிக்கப்பட்டு உணவில் சேர்த்துக் கொள் ளப்பட்டன.

இதேவேளை சாதாரண உணவு வகைகளை உண் ணும் வேறு சில மூட்டு வலி நோயாளிகளும் இவ்வாராய்ச் சியிலீடுபடுத்தப்பட்டு ஒத்து நோக்கப்பட்டனர். சகலருக் கும் வாரத்துக்கு மூன்று தடவை உடற்பயிற்சி சிகிச் சையும் (Physiotherapy) அளிக்கப்பட்டது,

ஆய்வின் இறுதியில் விரத மிருந்து தாவர உணவு வகைகளை உண்டுவந்த நோயாளிகளின் உடல் நிலையில் அபரிமிதமான மாற்றங்கள் ஏற்பட்டதை அறியக் கூடியதாக இருந்து வலியுடனிருந்த மூட்டுகள் வீங்கியிருந்த பாகங்கள், காலையில், படுக்கையிலிருந் தும் எழுந்திருக்க முடியாமல் வருந்திய உளைவுகள் ஆகி யன மறைந்திருந்தன. இம் மாற்றம் ஓராண்டு காலமாகி யும் நீடித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

நாம் நமது வாழ்க்கை முறை யின் பெருமையை மறந்து வாழும் நிலையில் மேல்நாட் டவர்கள் அவற்றை மேற்கொ ண்டு பயன் பெறுகிறார்கள்.

---

"நம் குழந்தைகள், தமது வாழ்வையும் ஆசைகளையும் துறந்து, தன்ன லத்தையிட்டு சிந்தனை சிறிதுகூட இல்லாது, பாடுபட்டு சாகும்போது, நான் ஒரு தாய் சும்மா இருக்க முடியுமா?"

மக்சிம் கோர்க்கி - "தாய்"

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# 30 வருடங்களாக ஓடிக்கொண்டு இருக்கிறேன்



**ஈழத்திலிருந்து ஓர் உண்மைக் குரல்**

**நினைவு மீட்பு**

ஆதிகோவிலடி ஜெயம்

அந்த காக்கி உடையணிந்த இருவரையும் அதாவது அவர்களின் அசைவற்ற உடல்களை தனது இருகைகளாலும் இன்னொரு காக்கி உடையணிந்த உருவம் தன்னால் முடிந்தளவு சிரமத்துடன் இழுத்துக்கொண்டு எமது பெரிய ஒழுங்கையிலிருந்து பிரதான வீதிக்கு இழுத்துச் சென்றுகொண்டிருக்கின்றது. மக்கள் அங்கு இங்கு என்று செய்வதறியாது ஓடிக் கொண்டிருக்கின்றார்கள். ஏதோ ஒரு சில இளைஞர்கள் மட்டும் தமக்குள் ஏதோ இரகசியமாக பேசி செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நேரமோ மதிய போசனம் முடிந்த நேரம். அந்த பெரிய ஒழுங்கையின் ஒருபுறம் கடல் மறுபுறம் காங்கேசன்துறை பிரதான வீதி எல்லோரும் ஓடி ஒழித்துக் கொள்வதிலிருந்து என்னவோ விபரீதம் நடக்கப் போகிறதென சிறுவனாக இருந்த போதும் என்னால் யூகிக்க முடிந்தது. எனவே நானும் எனது வீட்டை நோக்கி பருந்தைக் கண்டதும் தாயைத் தேடி ஓடும் கோழிக் குஞ்சு போல அம்மாவைத் தேடி ஓடித்திரிந்தேன். எனது கால்கள் நேரே வீட்டுக்குள் போகத்தெரியாது எங்கெங்கோ திரிந்துதான் அம்மாவைச் சென்றடைக்கலம் புகுந்தன. மிகவும் சந்தடி மிக்க எனது கிராமம் அந்தப் பகல்ப் பொழுதில் நடுச்சாமத்தில் காணும் மயான அமைதியிலும் மோசமான அமைதியுடன் நிலவியது. நாய்கள் ஊளையிடும் சத்தத்தைத் தவிர நிசப்தமே நிலவியது.

நான் அம்மாவை அடைந்து சிறிது நேரத்தில் பாடசாலையில் விளையாட்டுப் போட்டியில் ஊதும் விசிவ் சத்தம் பலமாகக் கேட்டது. என்ன விந்தையடா என எண்ணுவதற்குள் பெரிய வாகனங்கள் உறுமிக்கொண்டு வந்து எமது கிராமத்தை முற்றுகையிடுவது போன்ற உணர்வு. ஆம், சற்றே நேரத்தில் கிராமத்தில் காட்டாறெனப் புகுந்த காக்கி உடைகள் மக்களை இழுத்து அடித்து, உதைத்து சித்திர வதை செய்ய ஆரம்பித்தன. மக்கள் பீதியுற்று சிதறி ஓடினர். தங்கள் ஆவேசம் அடங்கியோ அடங்காமலோ அவர்கள் சிறிது நேரத்தில் யாருடையதோ பணிப்பின் பேரில் நகர்ந்து சென்றனர். அன்று ஊரில் பெரும்பீதி நிலவியது. அங்கு வந்த காட்டாறுதான் ஸ்ரீலங்காவினால் அனுப்பப்பட்ட சிங்களச் சிப்பாய்கள். அவர்களுடைய அட்டகாசம் அத்துடன் முடியாது என மக்கள் அன்றே புரிந்திருந்தனர். குடிமக்கள் மூட்டை முடிச்சுக்களுடன் வீடுகளை விட்டு புறப்பட்டுக் கொண்டிருந்தனர். எனக்கும் என் சகோதரர்களுக்கும் பயம், ஆனால் எங்கள் அம்மாவோ எமக்கு தைரியம் கூறிவைத்துக் கொண்டிருந்தார். நாம் பயந்த

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மைக்குக் காரணம் அன்று இரவு அந்தச் சிங்களச் சிப்பாய்கள் எமது கிராமத்திலே தீமூட்டி முற்றாக நாசம் செய்வது என திட்டமிட்டிருந்தனராம்.

இருள் கௌவிக் கொண்டு வந்து ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியவில்லை. கடற்கரையில் மாலை நேரத்தில் கூடும் மக்கள் ஒருவரையும் காணவில்லை. மிக சுறுசுறுப்பாக தமது மீன்பிடி உபகரணங்களை எடுத்து வந்து அதிகாலை தொழிலுக்குப் போவதற்காக ஆயத்தப்படுத்தும் ஒருவரையும் அங்கு காணவில்லை. பயம் மிகுதியால் நாம் அழத்தொடங்கினோம். அக்கம் பக்க வீட்டுக்காரர்களுக்கு அம்மா குரல் கொடுத்துப் பார்த்தார். என்ன பயன்? நாம் மயானத்தின் மத்தியில் தனியே இருப்பதாக உணர்ந்தோம். எமது பயமிகுதியை உணர்ந்த தாயார் வீட்டுப் பொருட்களை எங்கெங்கோ ஒழித்து பவுத்திரப்படுத்தி வைப்பது போல நான் உணர்ந்தேன், பயத்தின் மிகுதியால் எதையும் சரியாகப் புரிய முடியவில்லை.

அன்றிரவோடு இரவாக இன்றைய எமது தலைவரின் (பிரபாகரனின்) ஆலடி வீட்டை கடந்து கம்பர்மலையில் உள்ள தலைவர் தங்கராசா என அழைக்கப்படும் என் குடும்பத்திற்குத் தெரிந்துள்ள ஒருவர் வீட்டிற்கு சென்றடைந்தோம். மறுநாட் காலை திருமதி தங்கராசா அகதிகளாகிய எமக்கு அவித்துத் தந்த புட்டும் மையல் கிழங்குப் பொரியலும் இன்றும் என் நாவில் ஊறுகின்றது. மறுநாள் காலை நாம் எதிர்பார்த்தது போல் ஊரில் எந்த அசம்பாவிதங்களும் நடக்கவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் புரிந்தது, இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உள்ளூர்த் திருடர்கள் அன்றே தமது கைவரிசையைக் காட்டியிருந்தனர். எமது வீட்டிலும் உணவுப் பண்டங்கள் உட்பட துணிமணிகள் காணாமல் போயிருந்தன. அம்மா நான் புறப்படும்பொழுது சில சாமான்களை பாதுகாப்புத்தேடி வைத்ததை அப்போதுதான் நான் நினைவு கூர்ந்தேன்.

கடந்த ஒக்டோபர் 16ம் திகதி ஸ்ரீலங்கா அரசின் வானொலி ஒலிபரப்பினால் வடமராட்சியை விட்டு மக்கள் சாரை சாரையாக கிளம்பிக் கொண்டிருந்தார்கள். தற்சமயம் மாவீரர் வீதியில் வதியும் நான் 61ம் ஆண்டிலிருந்து ஓடி ஓடிக்களைத்துப் போய் அன்று ஓடுவதில்லை என்று முடிவெடுத்திருந்தேன். அன்று வல்வெட்டித்துறை மக்கள் மட்டுமல்ல முழு வடமராட்சி மக்களுமே வீடுகளை விட்டு தென்மராட்சிக்குப் போய்க் கொண்டிருந்தனர். அப்படி அவசர அவசரமாக மக்கள் குடிபெயர்ந்தமைக்கு முக்கிய காரணம் இவ்வருடம் தைமாதம் 20ம் திகதி வல்வையில் நடந்த சம்பவமே. அன்று மக்களை வீடுகளை விட்டு வெளியேறுமாறு 24 மணி நேரத்திற்கு மேல் அவகாசம் கொடுத்த ஸ்ரீலங்கா விமானப் படை 2 மணி நேரத்திற்குள் தனது மூர்க்கத்தனமான தாக்குதலைத் தொடங்கி தொடர்ந்து நான்கு நாட்களாக அராஜகம் புரிந்தது. எனவே கிஞ்சித்தேனும் அரசபடைகளில் நம்பிக்கையற்ற மக்கள், குழந்தைகள், வயோதிபர் உட்பட அந்தச் சாமத்தில் எனது வீட்டு வீதியோரத்தால் நடக்க முடியாமல் கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு போன காட்சி 61ம் ஆண்டு நாம் ஒரு சில குடும்பங்கள் ஓடியதைப் போன்று பலமடங்காகப் பெருகி ஊரே ஓடுமளவிற்கு வந்திருக்கின்றதே இதுவும் ஒருவித பரிணாம வளர்ச்சிதான் போலும் என எனக்குள் எண்ணத் தோன்றுகிறது.



**61 ம் ஆண்டிலிருந்து ஓடி ஓடிக் களைத்து அன்று ஓடுவதில்லையென்று முடிவெடுத்திருந்தேன்**

விடியற்காலை 3.30 மணியளவில் ஏறக்குறைய ஊரில் உள்ள அனைவருமே போன

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பின்னர் எனது குடும்பத்தாரைப் படுக்க வைத்து நான் ஊரைச் சுற்றி ஒரு வலம் வந்து பார்த்தேன். இதுவா வல்வெட்டித்துறை, எத்தனையோ சாதனைகளைப் புரிந்த இந்த மண் ஓடுவதிலும் ஒரு சாதனையைப் புரிந்திருக்கின்றது. இதை வெட்கப்பட்டுச் சொல்வதா? அன்றி மக்கள் எடுத்த விவேகமான முடிவு என்று சொல்வதா? என்று எனக்குப் புரியவில்லை.

அதிகாலை 4,15 மணியளவில் நான் பிறந்த குறிச்சியான ஆதிகோவிலடிப் பக்கம் போய் அந்த மண்ணையும் பார்க்க என் உள்ளம் ஏவியது. ஆம் அந்த மண்ணில்தான் முதல் முதலில் ஸ்ரீலங்கா சிப்பாய்களின் கோரக் கொலைகள் நிகழ்ந்தன. அமைதியான அந்தச் சூழலில் எங்கே எப்போது குண்டு வீச்சு விமானங்கள் வருமோ என்ற சிந்தனையுடன் உலவி வந்த எனக்கு 30 வருடங்களுக்கு முன் நான் கண்ட காட்சி அப்படியே என் கண் முன் தோன்றியது. அந்த ஆதிகோவிலடி மண்ணில் அந்த வேளையிலும் என்னைப் போல ஒரு சிலர் நடமாட்டத்தை நான் கண்டேன்.



எனக்கு அப்போ வயது பதினொன்று (11). எனது வீடு கடலோரத்தில் இருந்தமையாலும் எமது கிராமத்தின் வறுமை நிலையாலும் எமது வீட்டில் கிணறு இல்லை. எனவே வல்வெட்டித்துறைச் சந்தியிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் காங்கேசன்துறை வீதியில் அமைந்த ஆலடி என்னும் இடத்தில் உள்ள வண்ணாவளவு என்று அல்லது குமரகுருவாடி என அழைக்கப்படும் வளவிலுள்ள துலாக் கிணற்றில் பெரியவர்கள் குளிக்கும்போது அவர்களின் தண்ணீரை ஏந்தி நானும் குளித்துக் கொண்டிருந்தேன். நேரம் பகல் 12 மணியிருக்கும் காக்கி உடையணிந்த 3 பேர்கள் எமக்குப் புரியாத பாஷையில் ஏதேதோ பேசி தெருவில் நின்ற சனங்களையெல்லாம்

**ஸ்ரீலங்கா இராணுவம், பின்னர் இந்தியப் படையும் இருந்து அட்டகாசம் புரிந்த இராணுவ முகாம் இன்று எம் மைந்தர்களின் முகாமாக மாறி வெற்றி நடைபோடுவதையும் எமது சொந்த இராணுவம் பயிற்சி பெறுவதையும் பார்க்கும் போது எல்லா துன்பமும் மறைந்து வெற்றியுணர்வு தோன்றுகிறது.**



துரத்தியவண்ணம் போய்க்கொண்டிருந்தனர். அவர்கள் எங்களைத் தாண்டியதும் நானும் றோட்டிலிருந்து கடற்கரையிலுள்ள எனது வீட்டிற்கு ஓடிச் சென்றேன். அங்கு எனது உடுப்பை மாற்றிக் கொண்டு நான் ஆதிகோவிலடிக் கடற்கரையில் அமைந்துள்ள மீன்பிடிச்சங்கத்தால் அமைக்கப்பட்ட பந்தலுக்குப் போகவும் சிங்களச் சிப்பாய்கள் பிரதான வீதியில் இருந்து பெரிய ஒழுங்கை ஊடாக அங்கு வரவும் சரியாக இருந்தது.

அப்போது கடற்தொழிலால் வந்தவர்கள் அந்தப் பந்தலில் தமது வலைகளைச் சீர் செய்து கொண்டும் ஒருசிலர் பொழுதுபோக்காக அன்றைய தொழிலைப் பற்றிப் பேசிக் கொண்டும் ஒருசிலர் கடற்றொழில் களைப்பைப் போக்க பனையாகாரம் அருந்திவிட்டு வந்து அதில் தங்கி வம்பளந்து கொண்டும் இப்படிப் பலவிதமான இளையோர், முதியோர் கூடிய கூட்டத்தைச் சுற்றி எம்மைப் போன்ற சிறியோர்களும் விளையாடிக் கொண்டிருந்த இந்த இடத்திற்கே சிப்பாய்கள் வந்து சேர்ந்தனர்.

எமது மண், எமது பந்தல், எமது ஊர் இதில் எவருக்கும் வேறு கருத்து இருக்கவில்லை. தமது வீடு போலத்தான் சாதாரணமாக அதை எல்லோரும் பாவித்து வந்தனர். சீருடையில் வந்த சிப்பாய்கள் சிங்களத்தில் ஏதோ கூறி அங்குள்ளவர்களை துரத்தியது மட்டுமல்லாமல் அடித்துத் துன்புறுத்தவும் தொடங்கினார்கள். ”இளங்கன்று பயமறியாது” என்பார்களே அந்த நிலையோ அன்றி எமது சொந்த மண்ணில் இருந்து எம்மை அடித்துத் துரத்த இவர்கள் யார்? என்ற ஆவேசமோ தெரியாது அக்கட்டத்தில் இருந்த ஒரு சில இளைஞர்களுடைய கண்கள் பேசியது, மறுகணம் சிங்களச் சிப்பாய்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். பஞ்சலிங்கம் என்ற இளைஞர் ஒரு சிப்பாயை அப்படியே தூக்கி நிலத்தில் போட்டு அடித்துப் பந்தா

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

டினார். அந்த இடத்தில் திரு. அழகையா, திரு. இராமசாமி (இருவரும் சகோதரர்கள்) மற்றும் வ. சோதிலிங்கம் என்ற நபர்கள் நின்று சண்டையில் ஈடுபட்டதை என்னால் ஞாபகப் படுத்த முடிகிறது.

சண்டை தொடங்கியதும் நான் பாதுகாப்புத் தேடி பெரிய ஒழுங்கையால் ஓடிச் சென்று பால சிங்கம் என்பவரின் வீட்டிற்குள் புகுந்து வேலியால் பார்த்துக் கொண்டிருந்தேன். மடக்கிப் பிடிக்கப்பட்ட மூன்று சிப்பாய்களுள் ஒருவன் துப்பாக்கியுடன் தப்பிவந்து நான்நின்ற வீட்டு வேலியுடன் நின்று துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்துக் கொண்டிருந்தான். அப்போது அந்த வீட்டிற்குக் கிழக்குப்புறமாக இருக்கும் ஒரு சிறு ஒழுங்கையால் மார்க்கண்டு என்னும் ஒருவர் பெரியதொரு (பெரியமீன்களைத் தூக்கி வள்ளத்தில் போடும் கொழுவை) தூண்டிலுடன் வந்த வேட்டுக்களைத் தீர்க்கும் சிப்பாயின் பின் புறத்தால் வந்து கழுத்துக்குக் குறி வைத்துக் கொழுவி இழுத்தார். அந்தோ பரிதாபம் அவர் குறி தவறிற்று, ஆனால் சிப்பாயின் குறி தவறவில்லை-அவன் திரும்பி இவரைச் சுட்டுவிட்டான். அக்குண்டு இவரது வாய்க்குள் புகுந்து அலகால் வெளியில் வந்துவிட்டது.

இதைத் தொடர்ந்து அந்தச் சிப்பாய் திரும்பவும் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று குற்றுயிராக இருந்த இரத்தம் தோய்ந்த இரு சிப்பாய்களையும் தனது இரு கரங்களாலும் அணைத்தபடி சொர சொர என இழுத்துக் கொண்டு பிரதான வீதிக்கு வந்து விசில் அடித்துத் தனது அபாயத்தை தூரத்தில் இருக்கும் ஏனைய சிப்பாய்களுக்கு தெரியப்படுத்தினான். சிறிது நேரத்தில் பேரிரைச்சலுடன் வாகனங்கள் நிறைய சிப்பாய்கள் வந்து சேர்ந்து ஊரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

நான் பின்னர் அறிந்தேன், நம்மவரின் பிடியில் அகப்பட்ட சிப்பாய்களில் ஒருவனை திரு. இராமசாமி என்பவர் ஆட்டுக்குச் சீக்காய் சீவிக்கொண்டிருந்த பாளைக் கத்தியால் கண்டபடி வெட்டியதால் அவனது மூக்கும் காதும் அறுக்கப்பட்டு அவன் அந்த இடத்திலேயே இறந்ததாகவும் மற்றைய சிப்பாய் யாழ் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இறந்ததாகவும் இச்சண்டையில் திரு. அழகையா என்பவருக்கு பட்ட துப்பாக்கி ரவை அவரது தோழ்பட்டைக்குக் கீழ் கமக்கட்டில் காயத்தை ஏற்படுத்தியது. காயப்பட்ட நம் இருவரும் உயிர் பிழைத்துக் கொண்டனர். இதில் திரு. மார்க்கண்டு என்பவர் பின்னர் இயற்கை மரணம் அடைந்தார்.

இக்கட்டுரையை எழுதி முடிக்கும் தறுவாயில் திரு. சோதி லிங்கம் என்பவரை நேரில் கண்டு இதுபற்றிக் கேட்ட போது பின்வருமாறு விபரித்தார். "டே மச்சான் அது சத்தியாக்கிரக காலத்திலே நாங்கள் கறுத்தக் கொடி கட்டி எமது எதிர்ப்புகளை சிங்கள அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தினோம். அப்போதுதான் இவர்கள் வந்து கறுத்தக் கொடிகளை எங்களைக் கொண்டு அறுப்பித்து, பின்னர் எங்கடை ஊருக்குள் புகுந்து இங்கு அட்டகாசம் புரிந்தவர்கள். அவன் பஞ்சலிங்கம் கட்டிப்பிடிக்க நான் ஒருவனுக்கு இரண்டு

## எதிர்காலத்தைத் திட்டமிட வேண்டிய நிலையில் தமிழ் அகதிகள்

தற்சமயம் இந்திய அரசு தமிழ் நாட்டில் இருந்து இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பிக் கொண்டிருக்கின்றது. அகதிகளின் விருப்பத்தைப் பற்றி அவர்கள் பொருட்படுத்தவில்லை. இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான அகதிகள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதே வேளை ஐரோப்பிய நாடுகளிலும் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதைப் பற்றி ஆலோசனைகள் நடத்தப்பட்டு வருகின்றது. சுவிற்சலாந்து உட்பட சில நாடுகள் நிலைமைகளை அவதானிப்பதற்கு சில உயர் அதிகாரிகளை இலங்கைக்கு அனுப்பியுள்ளன.

போர்ச் சூழ்நிலையில் அகதிகளைத் திருப்பி அனுப்புவது மிகவும் சங்கடமான விடயமாக இருப்பதால், இனப்பிரச்சனையில் விரைவில் ஒரு சமாதானத் தீர்வைக் கொண்டுவர ஐரோப்பிய நாடுகளும் காமன்வெல்த் நாடுகளும் சில முயற்சிகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளன.

எது எப்படியிருந்த போதிலும் வெளிநாடுகளில் வாழும் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவதற்கான சூழ்நிலை உருவாகி வருகின்றது. அகதிகள் திருப்பி அனுப்பப்படும் சூழ்நிலையில் நாடுவிட்டு நாடுசென்று தஞ்சம் கோர முடியாத சூழ்நிலையும் உருவாகும்.

இந்த நிலையில் அகதிகளாக உள்ள ஒவ்வொருவரும் தமது எதிர்காலத்தை நன்கு திட்டமிடல் வேண்டும். வெளிநாட்டு வாழ்க்கையில் உல்லாசத்துக்காக, உழைக்கும் பணத்தை வாரியிறைக்கும் பலரைப் பார்த்திருக்கின்றோம். எதிர் காலத்தைப் பற்றி எவ்வித சிந்தனையும் இல்லாமல் வெறுமே காலத்தைக் கழித்துக் கொண்டிருப்பவர்களையும் பார்க்கிறோம்.

இனிவரும் காலங்களில் அகதிகளாக வாழும் ஒவ்வொருவரும் தமது வாழ்க்கையை நன்கு திட்டமிடல் வேண்டும். ஆடம்பரப் பொருட்களை வாங்கிக் குவிக்காமல், பணத்தை சேமிக்க முயல வேண்டும்.

தாயகத்துக்குத் திருப்பி அனுப்பப்படும் போது அங்குசென்று தமது வாழ்க்கையை செம்மைப் படுத்தக் கூடிய வகையில் தொழில் முயற்சிகளையோ அன்று முதலீட்டையோ வைத்திருக்கக் கூடிய வகையில் ஒவ்வொரு அகதிகளும் தமது எதிர் காலத்தை திட்டமிடல் வேண்டும்.

இனிவரும் நாட்களில் ஒவ்வொரு நாள் உழைப்பின் ஊதியத்தில் பெரும் பகுதியை சேமிக்க வேண்டிய கட்டாயமும், தேவையும் ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதையும் இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ■

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கல்லுகளால் தலையிலும் முகத்திலும் குத்தினேன். அவன் இரத்தம் ஓடிச் செத்துப் போக எனக்கு மனம் ஒரு மாதிரிப் போச்சு. செத்தவனுடைய துவக்கை இழுத்துப் பார்த்தேன். அது நல்லாக் கொழுவுப்பட்டு இருந்ததால் வரமாட்டன் என்றிருந்தது. ஆனால் இராமசாமி பாளைக் கத்தியால் அவனின் பெல்டை வெட்டித் துவக்கை எடுத்து அதனை முறித்துப்போட்டு அதற்குரிய குண்டுகளையும் கொண்டுபோய் கடலுக்குள் எறிந்து விட்டார். மச்சான் இவர்கள் இப்ப வந்தாலும் நான் எதிர்த்துப் போராடத்தயார்" என்று அன்று நடந்த சம்பவத்தை நடித்துக் காட்டினார்.

ஸ்ரீலங்கா ஆதிக்க வெறியர் முதல் முதலில் எம்மண்ணில் காலடி எடுத்துவைத்த அன்றே தகுந்த பாடம் படிப்பித்த இந்த மண்ணின் அந்த மைந்தர்களும் இம்மாவீரர் வாரத்தில் நினைவு கூரப்பட வேண்டியவர்களே.

இவர்களுள் இராமசாமியும், மார்க்கண்டுவும் இயற்கை மரணம் எய்தினர். அடுத்தவர்களான சோதிலிங்கம், பஞ்சலிங்கம் என்பவர்கள் இன்று நிகழும் சம்பவங்களை பார்த்த வண்ணமே வாழ்கின்றனர். இவர்களின் வாரிசுகளும் இவர்கள் காட்டிய வழியில் சென்று இந்த மண்ணின் மீட்புக்காக மாவீரர்கள் ஆகியுள்ளனர். அடுத்த சிலர் மண் மீட்புக்காக தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்றனர். முதலாவது பரம்பரை தொடக்கிவிட்ட பணியை இரண்டாவது பரம்பரை தொடர்ந்து செல்கின்றது. இதை நாம் தலைமுறை தலைமுறையாகச் செய்ய வேண்டுமா அன்றி எங்கள் இந்தத் தலைமுறையிலேயே ஈழம் காண்போமா?

ஆதிகோவிலடி என்னும் இக் கிராமம் வல்வை நகரின் கடற்கரையோரத்தில் மேற்குப் புறமாக அமைந்துள்ள சுமார் 10 ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்ட ஒரு மீனவர் கிராமம். இது தலைவன் பிரபாகரன் வீட்டிற்கு அடுத்தாற்போல வடக்கே உள்ளது. முழுக்க முழுக்க மீனவர்களைக் கொண்டது. இலங்கையில் காத்தான் குடியைத்தான் சன அடர்த்தி கூடியதாக அனைவரும் அறிந்துள்ளனர். ஆனால் அதைவிட சன அடர்த்தி கூடியது இக்கிராமம் என்பது பலருக்குத் தெரியாது. அதே போல வல்வை என்னும் மாம்பழத்தை அறிந்த பலருக்கு சுவையான மாம்பழத்தில் உள்ள வண்டு அரித்த பகுதியாக தன்னகத்தே பல குறைகளைக் கொண்டிருக்கும் இக்கிராமத்தையும் இதன் குறைகளையும் அறிய இடமில்லை.

முதன் முதலில் சிங்கள இராணுவத்தைப் பலிகொண்டமைக்காகவோ என்னவோ இக்கிராமத்துடனேயே ஸ்ரீலங்கா இராணுவம் தன் முகாமை ஊரிக் காட்டிலுள்ள பா திரிபங்களா என்னும் கிறிஸ்தவ பாதிரிமார் ஆதியில் தங்கவந்த இடத்திலேயே அமைத்தது. இதன் நிமித்தம் சில மக்கள் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டும் மீனவர்கள் கடலிலும் கரையிலும் சுட்டுக் கொல்லப்பட்டும் முகாமைத் தாண்டிச் செல்வோர் காணாமல் போவதும் போன்ற பலர் சொல்லொணாத் துன்பத்தை அனுபவித்து வந்தார்கள். இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் ஒப்பரேசன் லிபரேசன் அமைந்தது. இன்று சிங்கள இராணுவம் ஊரையே தரைமட்டமாக்கியதுடன் மக்களின் மீன்பிடி உபகரணங்களையும், வள்ளங்களையும் எரித்து மக்களை உண்ண உணவுக்கு வழியின்றியும் இருக்க இடமின்றியும் செய்தார்கள். 1983ல் சிறிய அளவில் தொடங்கிய இராணுவம் அட்டகாசம் 1987ல் உச்சக்கட்டமடைந்து இன்றுவரை மக்கள் சொல்லொணாத் துயர் அடைந்து வருகின்றனர்.

ஆனால் ஸ்ரீலங்கா இராணுவம் பின்னர் இந்தியப் படையும் இருந்து அட்டகாசம் புரிந்து இராணுவ முகாம் இன்று எம் மைந்தர்களின் முகாமாக மாறி வெற்றி நடை போடுவதையும் எமது சொந்த இராணுவம் பயிற்சி பெறுவதையும் பார்க்கும் போது எல்லா துன்பமும் மறைந்து வெற்றியுணர்வு தோன்றுகிறது. ■

## செய்திச் சிதறல்

**தடைதாண்டி வந்தவை**

நெடுந்தீவில் சிறீலங்கா இராணுவத்திடம் சிக்குண்டுள்ள மக்கள், ஒடியல், மீன், தேங்காய் ஆகிய மூன்றையுமே பிரதானமாக உண்டு உயிரைக் காப்பாற்றிவருகின்றனர். போதிய மருந்துகள் இல்லாததால், பாம்புக்கடி உட்பட பல நோய்களுக்கு கைமருந்துகளையே மக்கள் பாவிக்கின்றனர்.

வேலணையில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் 308 பேர் சிக்கியுள்ளனர். இவர்கள் அனைவரும் பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவிலில் படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பொருட்கள் அபகரிக்கப்பட்ட நிலையில் வெறுமையாகக் காணப்படும் தமது வீடுகளை சென்று பார்வையிட இவர்களுக்கு வாரத்தில் ஒரு தடவை, ஒரு மணிநேரம் மட்டுமே படையினரால் அனுமதி வழங்கப்படுகின்றது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



**கா**லங் காலமாக வீட்டினுள் முடங்கிக்கிடந்த தமிழ்ப்பெண்கள், தமிழீழத்திலே, ஆயுதங்கள் தாங்கி போர் முரசு கொட்டிநிற்கின்றார்கள். வீரமும், விடுதலை உணர்வும்கொண்டு, வீறுகொள்ளும் புதிய சரித்திரத்தைப் படைக்கத் துடித்துநிற்கின்றார்கள். காலங்காலமாக எமது சமூகம் தாங்கிவந்த பல்வேறு அடக்குமுறைச் சின்னங்களில் ஒன்றாக பெண் அடக்குமுறையும் தொடர்ந்து வந்தது. ஆணாதிக்கக் கரங்களின் அழுங்குப் பிடியில், சிக்கித்தவித்த பெண்சமூகம், புதிய உலகைத் தரிசிக்கும் அவாவுடன், புறப்பட்டுநிற்கின்றது.

தமிழீழ மக்களின் சனத்தொகையில், சரிபாதிக்கும் மேலாக, பெரும்பான்மையினராகவிளங்கும் தமிழ்ப்பெண்கள், அரச அடக்குமுறை, பெண்ஒடுக்குமுறை ஆகிய கொடுமையான இருமுனைத் தாக்கத்தை அனுபவித்தவர்கள். அரச அடக்குமுறை, தமிழ்த் தேசிய ஒடுக்குமுறை என்ற வடிவத்தினூடாகவும், பெண்ஒடுக்குமுறை ஆணாதிக்க அடக்குமுறை என்ற வடிவத்தினூடாகவும் பெண்கள்மீது திணிக்கப்பட்டன. கைது செய்தல், சித்திரவதை செய்தல், பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படல், உயிர்க்கொலை என்ற வகையில் அரச அடக்குமுறை தமிழ்ப் பெண்கள்மீது தனது பலாத்காரத்தை பிரயோகித்து நிற்க, வாழும் சமூகத்தாலும், பாரிய சமூக அடக்கு முறைகள் பெண்கள்மீது திணிக்கப்பட்டுள்ளது. வீட்டுவேலைகள் செய்வது பெண்ணுக்குரித்தான கடமை என்றும், ஆணுக்கு எப்பொழுதும் அடங்கிப்போதல் அவளுக்கான சிறப்புப் பண்பு என்றும் சமூகத்தால் விதிக்கப்பட்டது. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நால்வகைக் குணங்களையும் தன்னகத்தே கொண்டு நடக்கவேண்டியவளாகவும் பெண் ஆணாதிக்க சமூகத்தால் நிர்ப்பந்திக்கப்படுகின்றாள். சாதீயப் பிரச்சனை, சீதனப்பிரச்சனை போன்ற சமூகக்கொடுமைகளால் அவள் மிகவும் பாதிக்கப்பட்டாள். இவ்வாறாக தமிழீழத்திலே, தமிழ்ப் பெண்களின் கடந்தகாலம் வேறுபட்ட சூழலுக்கூடாகவும் அதேசமயம், நடுத்தரவர்க்கத்துப் பெண்கள் வேலை வாய்ப்புக்காக கல்வியை நாடியதால், கல்வி, பொருளாதார, சமூக விடயங்களில் அக்கறை காட்டக்கூடிய நிலையும் தோன்றியது. மாறாக பொருளாதார ரீதியில் பின்தங்கியிருந்த வகுப்பினரிடையே, பெண்கள் கூடுதலாக உடலுழைப்பை குடும்பச் சுமையுடன் சேர்த்தே வழங்குகின்றனர். ஆனால், அவர்களது வாழ்நிலை சகலவழிகளிலும் மிகவும் பின்தங்கியே இருந்தது. இந்தப் பிரச்சினைக்களுக்கான தீர்வை காண்பதற்கான வழியாக, அரசியல் அதிகாரமற்ற, அரசியல் சுதந்திரமற்ற, அரசியல் உரிமைகளற்ற நிலையிலிருந்து, அரசியல் விடுதலையினூடாக, சமூக விடுதலையை நோக்கிய உறுதியான முன்னோக்கிய நகர்வே உள்ளது.

இந்த வரலாற்றுத் தேவையின் பொருட்டு, தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் கடந்த பத்தாண்டுகளில் தமிழீழப் பெண்கள் வகித்துவரும் பங்கு மகத்தானது. 1983ம் ஆண்டின் பிற்காலப்பகுதியில், இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர் சங்கத்தினால், தென்பகுதியில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர்களுக்குப் பாதுகாப்பில்லையென்றும், அதனை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


ந. முரளிதரன்

# ஈழ விடுதலையும் பெண்களும்

யொட்டி அந்த மாணவர்களுக்கான பீடங்கள் வடபகுதியிலேயே ஏற்படுத்தப்பட
வேண்டும் என்றும், யாழ் பல்கலைக்கழக வழாகத்தினுள் சாகும்வரையிலான
உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த உண்ணாவிரதப்
போராட்டத்தில் தமிழ் மாணவிகள் துணிச்சலுடன் பங்கு கொண்டமை
குறிப்பிடத் தக்க முக்கிய அம்சமாகும். அதைத் தொடர்ந்து தமீழ விடுதலைக்
கான ஆயுதப் போராட்டம் கூர்மையடைந்து வந்த தூழலிலே மிகப்பெருமளவு
தமிழ்ப் பெண்கள் தங்களை விடுதலை இயக்கங்களோடு இணைத்துக்
கொண்டார்கள். (இந்த விடுதலை இயக்கங்களிற் பல தாங்கள் வரித்துக்
கொண்ட இலட்சியத்திற்கு முரணாக செயற்பட்டு மக்களால் அந்நியப்
படுத்தப்பட்டமையும் இங்கு குறிப்பிடத் தக்கது). வடபகுதியில் "சுதந்திரப்
பறவைகள்" அமைப்பு உருவாக்கப்பட்டு பாடசாலை மாணவிகள் மற்றும்
யுவதிகள் பெருமளவில் பங்கு கொண்டு சமூக சேவை, முதலுதவிச்
சிகிச்சை, மருத்துவச் சேவை போன்ற பல்வேறு துறைகளில் கணிசமான
பங்களிப்பினை போராட்டத்திற்கு வழங்கத் தலைப்பட்டார்கள். இந்த அமைப்பு
பரவலான ரீதியில் தமிழ்ப்பெண்கள் தமிழீழ அரசியலில் பங்கு கொள்வதைத்
துரிதப்படுத்தியது. ஆயுதந்தாங்கிய தமிழீழ விடுதலைப் போராட்டத்தில்
தமிழீழப் பெண்கள் அரசியல், இராணுவப்பயிற்சிகளை முறையாகப் பயின்று
எதிரி இராணுவத்தினை விரட்டியடிக்கும்முகமாக சிறீலங்கா படையினருக்கு
எதிராக ஆண்கள் பங்கு கொண்ட கெரில்லாத் தாக்குதல்களில் அவர்களுக்குத்
துணையாக தாங்களும் பங்கெடுத்துக் கொண்டார்கள். ஆரம்பத்தில் ஆண்க
ளுக்கு உதவிபுரியும் வகையில் தங்களை போராட்டத்தில் அறிமுகப்படுத்திய
இந்தப்பெண்கள் கெரில்லாப்படையினர் வளர்ச்சிப் போக்கில் தனித்து நின்றே
சிறீலங்காப் படையினருக்கு எதிரான பல வெற்றிகரமான தாக்குதல்களை
நடத்தக்கூடிய ஆற்றலைப்பெற்றிருந்தார்கள். இன்று அவர்கள் ஒரு மரபுவழி
இராணுவமாகத் தனித்து செயற்பட்டு எதிரிப்படைகளை சின்னாபின்னப்
படுத்துகிறார்கள்.

இந்த வளர்ச்சியினை தமிழ்ச் சமுதாய வரலாற்றிலே மிகவும் பாரிய வளர்ச்சிப்
போக்கினைகொண்ட முற்போக்கு அம்சம் எனலாம். குறிப்பாகத் தென்னாசி
யாவிலேயுள்ள பல நாடுகளில் பல தேசிய இனங்களில் பெண்களின் அரசியல்
விழிப்புணர்வு மிகவும் மந்த நிலையிலேயே காணப்படுகின்றது. (தனிப்பட்ட
ஒரு, சில நபர்கள் இதற்கு விதிவிலக்காக அமையலாம்). இந்தச் சுழ்நிலை
யில் தமிழீழ தேசியவிடுதலைப் போராட்டத்தில் தமிழீழப் பெண்களின் அதீத
ஈடுபாடானது, அரசியல்விழிப்புணர்வானது தாம் வரித்துநிற்கும் கொள்கைக
ளுக்காகத் தங்களை அர்ப்பணிக்கும் மனோபாவமானது தென்னாசியப்
பெண்களிடத்தே தாக்கத்தினை விளைவிக்கக்கூடிய செயல்முறையாகக்
கருதப்படுகின்றது. தமிழீழப் பெண்கள் மத்தியில் ஏற்பட்ட இந்த மாற்றமானது
தமிழீழ விடுதலைப் போராட்டத்தினூடாகவே தோன்றிய நிலையையும் நாங்கள்
அவதானிக்கலாம். எனவே போராட்டங்களின் தன்மையானது வரலாறு
முன்னோக்கி செல்வதற்கான பலமாற்றங்களைத் தன்னகத்தே கொண்டு
விளங்குகின்றது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



மற்றும் தமிழ்மக்களின் சமூக, கலைகலாச்சார பண்புகள் தனித்துவமானவை. சிங்களப் பேரினவாதம் தமிழ்த் தேசியத்தை அழிக்கும் திட்டமிட்ட நடவடிக்கைகளில் தமிழ் மக்களின் கலை கலாச்சாரப் பண்பாட்டு விழுமியங்கள் சீரழிக்கப்படுவதும் உள்ளடங்கியிருந்தது. இந்நிலையில் தமிழீழப் பெண்கள் வாழ்வில் ஏற்பட்ட மாற்றமானது ஆரோக்கியமான, செழுமையான சமூகப்பண்பாட்டு மறுமலர்ச்சியாகவே கருதப்படுகின்றது. சாதீயம், சீதனம் போன்ற சமூகக் கொடுமைகளுக்கு எதிராக அமைப்பு ரீதியான போராட்டங்களை முன்னெடுப்பதான குணாம்சங்களை விடுதலைப் போராட்டமானது தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.

கிழக்கு மகாணத்திலே, இந்தியப் படைகளுக்கு எதிரான யுத்தத்தின் போது இந்திய அமைதிப்படையை யுத்த நிறுத்தம் செய்யக் கோரி அன்னை பூபதி அவர்கள் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுத் தன்னுயிரை நீத்த சம்பவமானது கிழக்கு மாகாணத் தமிழ்ப் பெண்களின் அரசியல் விழிப்புணர்வுக்கான குறியீடாகத் திகழ்கின்றது. பங்குனி 8ம் திகதி சர்வதேச மகளிர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழீழ மகளிர் மத்தியில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் குறிப்பிடத் தக்க அம்சங்களாகவே திகழ்கின்றன. மற்றும் தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போராட்ட இயக்கமானது தனது கொள்கைத்திட்டத்தில்

"நாம் அமைக்கவிருக்கும் சுதந்திரத் தமிழீழத்தில் சீதன ஒடுக்கு முறை சட்ட ரீதியாக ஒழிக்கப்பட்டு பெண்களின் சம உரிமைகளும், சமசந்தர்ப்பங்களும் அரசியல் அமைப்புவாயிலாக உத்தரவாதமளிக்கப்படும். தேசிய வாழ்விலும், அரச நிர்வாகத்திலும், சமூக பொருளாதாரக் கட்டுமானப் பணிகளிலும் சரிசமப் பங்கேற்று உழைக்கப் பெண்களுக்கு வாய்ப்பளிக்கப்படுமென நாம் உறுதி கூறுகிறோம். பெண் பிள்ளைகளுக்கு கல்வி கட்டாயமாக்கப்படுவதுடன், தொழில் துறையில் பாலின வேறுபாடுகள் நீக்கப்படுமெனவும் உறுதியளிக்கின்றோம் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது. எனவே பெண் விடுதலை குறித்த தீர்க்கமான நிலைப்பாடு கொள்கைத் திட்டம் வாயிலாக தெளிவுபடுத்தப் பட்டுள்ளது. பெண் விடுதலை, பெண்நிலைவாதம் தொடர்பான விவாதக் களமானது ஒரு சாரார் மத்தியில் நாகரீகத்திற்கான, தங்கள் வித்துவத் தன்மையை வெளிப்படுத்துவதற்குரிய தளமாகப் பயன்படுத்தப் படுகின்றது. மாறாக நடைமுறையில் பெண்விடுதலை தொடர்பான சாத்தியமான எதுவித முன்னெடுப்புக்களையும் கொள்ளாத பூச்சியக் களமாகவே அது தோற்றமளிக்கின்றது.

தேசிய இனப் பிரச்சினை காரணமாகத் தமிழ் பெண்கள் பூமிப் பந்தின் பல்வேறு திக்குகளில் வாழ்ந்துகொண்டிருந்தாலும் தங்கள் உள்ளங்களால், உணர்வுகளால் தமிழீழத் தேசிய விடுதலையினூடாகப் பெண் விடுதலையை உள்ளடக்கிய சமூக விடுதலையைப் பெற்றிட தங்கள் பங்களிப்பினை வழங்கி [illegible]வது அத்தியாவசியமானது. ■

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# உதிக்கும் திசை நோக்கி உன்னதப் பயணம்..

விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. மாத்தையாவின் கிழக்கு மாகாணப் பயணத்தின் போது, அவரோடு அவரது பயணத்தில் பங்கெடுத்துக் கொண்ட பத்திரிகையாளர் ஒருவரின் பயணக் கட்டுரையிலிருந்து.....





கேள்வி பதில் வடிவில் எமது உரையாடல் தொடர்ந்தது. ஐயா இந்த இடத்துக்கு நீங்கள் வந்து எவ்வளவு காலம்? மூன்று மாதகாலமாகிறது. கும்புறு மூலை அடியோட வேட்டைக்கு இறங்கினதுதான், மறுகா ஊர்போகயில்லை. இந்த இடத்தில் இருக்கிறீங்களே சாப்பாடு வசதிகள் எப்படி? கஷ்டம்தான், என்ன செய்யிறது? இந்த இடத்துக்கு யாராவது வந்து உதவி செய்தார்களா? ஒருத்தரும் வரயில்ல மகன். இவ்வளவு மக்கள் இருக்கிறார்களே நோய் வந்தால் மருந்துக்கு என்ன செய்வீர்கள்? ஒரு மருந்தும் இல்லை: என்ட மகள் புள்ளைப் பெத்து அஞ்சு நாள், இண்டைவரை ஒரு குளிசையோ ஊசியோ இல்லை. இந்தப்பாலத்தடியில்தான் கிடக்கிறாள். (இதைக் கூறும் போது கண்ணில் இருந்து கண்ணீர் தாரைதாரையாக வழிகிறது) நீங்கள் உங்கள் இடத்துக்குத் திரும்பிப் போக முடியாதா? எப்படி மகன் போறது. கிணத்திலை ஆக்களை வெட்டிப் போட்டிருக்கிறாங்கள். அதைப் பார்த்தவங்க வந்து சொல்லுறபோது என்னெண்டு மகன் போக மனம் வரும். இந்தப்பகுதியில் எவ்வளவு குடும்பங்கள் உள்ளன? இந்த இடமெல்லாம் ஆக்கள்தான். ஒரு ஐநூறு குடும்பம் வரும். உங்கள் சொந்த இடம் எது? சித்தாண்டி, ஒவ்வொரு கேள்விக்கும் கடகடவெனப் பதில் வந்தது.

அவரிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டு அந்தப்பகுதியைச் சுற்றிப் பார்த்தேன். இது ஆற்றுப் பகுதியாதலால் சனக்கூட்டம் இலையான் மாதிரி மொய்த்துக் காணப்பட்டது. முழங்காலளவு தண்ணீர் உள்ள இந்த ஆற்றையே குளிப்பதற்கும், குடிப்பதற்கும் பாவிக்கின்றனர். இந்தத் தண்ணீருக்குச் சொந்தம் கொண்டாடியபடி இருநூறு மாடுகள் ஆற்றில் இறங்கின. மாடுகளும் மனிதர்களும் சமத்துவமாக இருந்த இந்த ஆற்றைக் கடந்து செல்கையில் துர்நாற்றமும் மூக்கைத் துளைத்தது. அருகில் உள்ள சிறு காட்டில் உள்ள பற்றைகளையே அனைவரும் மலசலம் கழிக்கப் பயன்படுத்துவதால் அப்பகுதியில் செல்லும் போது மூக்கு மிகவும் சிரமப்பட்டது.

அங்குள்ள மக்கள் பலர் ஒரு புல்லினால் வேய்ந்த சிறு குடிசைகளில் இருந்தனர். அது ஒரு கோழிக் கூட்டைத்தான் ஞாபகப்படுத்தும். எனவே கரிகாலனிடம் "இந்தக் புல்லின் பெயர் என்ன?" என்று கேட்டேன். "இலுக்கு என்பார்கள். இலக்கணப்படி இணுக்கு என்பதே சரியான பெயர் என்கிறார்கள். இப்புல்லை வெட்டி ஏழு நாள் வெய்யிலில் காயவைத்தபின் வேய்ந்தால் ஏழுவருடங்கள் பாவிக்கலாம் என்று கூறுவார்கள்" என்றார். சின்னச் சின்ன முள்ளுச்செடிகளால் வேயப்பட்டுக் கொண்டிருந்த குடிசைகளையும் கண்டோம்.

வழியில் இன்னொருவரைக் கண்டோம். நகரிலிருந்து வெளியேறி வந்தவர். அவரும் வயது வந்த பெண்பிள்ளைகள் இருவரும் இருந்தனர். அவரை விசாரித்தேன். ஐயா ஏன் இந்தப் பகுதிக்கு வந்தீர்கள்? கொக்கட்டிச் சோலைப்பகுதி உங்களுக்குக் கிட்டத்தானே? இங்கே எனது சகோதரி வீட்டுக்கு வந்தேன். கலவரம் தொடங்கியபடியால் இங்கேயே தங்கிவிட்டேன். மட்டக்களப்பு நகரில் சிலர் வீடுகளில் தங்கியிருக்கிறார்கள்தானே? நீங்கள் ஏன் போக முயற்ச்சிக்கவில்லை? பெண்பிள்ளைகள் உள்ள நாங்கள் அங்கே போகமுடியாது. இராணுவமும் முஸ்லீம் ஊர்காவல் படையும், வாழ்க்கையில் தாங்கள் பெண்களையே காணாதவர்கள் மாதிரி வெறித்தனத்துடன் நடந்துகொள்கிறார்கள். கற்பழிக்கப்படும் பெண்களை கொன்றுவிடுகிறார்கள். இப்படிப் பெண்கள் கற்பழிக்கப்பட்ட சம்பவம் ஏதாவது அறிந்தீர்களா? என்று கேட்டதும் பெருமூச்செறிந்தார்.

இராணுவம் நகருக்குள் வந்த சில நாள் செல்ல வீட்டில் இருக்கும் சாப்பாட்டுச் சாமான்களை எடுப்பதற்கு நான்மட்டும் தனியே நகருக்குள்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



போனேன். அன்று ஒரு சம்பவம் நடந்தது. மட்டக்களப்பு நகரிலிருந்து கல்லடிப் பாலம் வழியாக சைக்கிளில் ஒரு தந்தையும் மகளும் செல்ல முயன்றனர். பெரும்பாலும் மஞ்சத்தொடுவாய்ப் பக்கமாகத்தான் போகப் புறப்பட்டிருப்பார்கள். ஏனென்றால் காத்தான் குடியைத்தாண்டிப் போக முடியாது. தந்தைக்கு 50 வயதிருக்கும் மகளுக்கு 20 வயதிருக்கும். கல்லடிப்பாலத்தை நெருங்கியதும் இராணுவத்தினர் இவர்களை தடுத்து நிறுத்தினர். கொண்டு போன பொருள்களைச் சோதித்ததும் மகளைக் கொண்டுபோய்ச் சோதிக்க வேண்டும் என்றனர். தகப்பனோ மகளை விட்டு விடுங்கள் என்று கெஞ்சினார், கதறினார். அவரது கெஞ்சலையோ, கதறலையோ அவர்கள் கணக்கில் எடுக்கவில்லை. கல்லடிப் பாலத்தடியில் தாங்கள் தங்கியிருந்த பாலத்தடிக்குக் கொண்டு போனார்கள். தகப்பனோ கதறிக்கொண்டேயிருந்தார். இவர் கதறும்போது இடையிடையே இவருக்கு அடியும் விழுந்தது. இவரோ தொடர்ந்து கதறிக்கொண்டிருந்தார். கடைசியில் ஒரு மணித்தியாலம் செல்ல மகளைக் காட்டுகிறோம் என்று கூட்டிக் கொண்டு போனார்கள். மகளின் நிலையைக் கண்டார் தந்தை. "எண்ட மகளே" என்று கதறியபடியே கையை உயர்த்திக் கொண்டு திரும்பி வேகமாக ஓடி வந்தார். கல்லடிப் பாலத்தில் இராணுவத்தினர் மறித்தனர். அவர்களை விலக்கி விட்டு ஆற்றில் குதித்தார். இதைத்தான் நாங்கள் கண்டோம். அடுத்த நாள் தற்கொலை செய்து கொண்ட இவரது உடலும், கற்பழித்துக் கொலை செய்யப்பட்ட, அலங்கோலமான நிலையிலிருந்த அவரது மகளின் சடலமும் ஆற்றங்கரையில் கரை ஒதுங்கினது என்றார். கல்லடிப் பாலத்தடியில் நின்று வாவியில் உள்ள மீன்களின் இனிமையான இசையைப் பலரும் செவிமடுப்பதுண்டு. நிச்சயமாக அன்றையதினம் அந்த மீன்கள் ஆனந்த கீதம் இசைத்திருக்க மாட்டா...

தொடரும்......

## புறநானூற்றில் இல்லாதவை - தாய்மைகளின் வீரம்.



கேட்டவுடன் ஒரு கவலை; மகன் இறந்துவிட்டாரே என்றே ஒழிய மற்றும்படிக்கு நான் அதை நினைத்துப் பெருமைப்பட்டேன். எத்தனை மக்கள் ஷெல்லடியாலும், சாதாரண மக்களையெல்லாம் கொன்றுகுவித்தார்கள். சாதாரண பெண்களையெல்லாம் சேட்டைகள் செய்து மானபங்கப்படுத்தினார்கள். இதனை நினைக்கும்போது என்னுடைய மகனின் இறப்பு என்னைப் பாதிக்கவில்லை. அவர் பெருமையாகத்தான் இறந்தார். இன்றைக்கும் தெருவால் போவோரெல்லாம், இதுதான் மில்லரின் வீடு, இதுதான் மில்லரின் அம்மா என்று கதைத்துக்கொண்டுதான் போவார்கள். இன்றைக்கும் சரி எனக்கொரு மகன் போனதே ஒழிய, மில்லரை சனங்களெல்லாம் போற்றினபடிதான். பேரோடும், புகளோடும் போனார்; இன்றைக்கும் அவருடைய பெயர் பெரிதாக விளங்குகின்றது.

கரும்புலி மில்லரின் தாயார்

ஆதாரம் B. B. C - INSIDE STORY

குடாநாட்டில் தொற்றுநோய்கள் வேகமாகப் பரவிவருகின்றன. சிறீலங்கா அரசின் பொருளாதாரத்தடையால், மருந்துப்பொருட்களுக்கான தட்டுப்பாடு நிலவிவருகின்றது. இந்நிலையில், சூழல் மாசடைவதைத் தடுப்பதற்கான இயக்கம் குடாநாட்டில் முழுமூச்சாக பணிகளில் இறங்கியது. 21. 12. 91 இலிருந்து, 27. 12. 91 வரையான ஒரு வாரகாலம் சூழல் சுகாதார வாரமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. சிரமதானமூலம் சுற்றாடல் சுத்திகரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. கிராமங்கள் தோறும், கொடிய தொற்றுநோயிலிருந்து மக்களைக் காக்க சூழல் சுத்திகரிப்பின் அவசியம் குறித்து கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஒரு உண்மைச் சம்பவம்

# தாய்



கனகமக்கா என்றால் அந்த ஊரில் யாருக்கும் தெரியும். அவ்வூரின் எல்லா நன்மை தீமைகளிலும் பங்கெடுக்கும் ஒரு தாயாகவே அவள் மாறிவிட்டாள். தன்னுடைய கணவனுக்கு சிங்கள இராணுவம் இழைத்த கொடுமைச் சாவை அவளின் மனம் மறக்க முடியாதிருந்தது. அன்றைய நிலையிலிருந்து தன்னை ஒரு போரா ளியாகவே மாற்றி விட்டாள் கனகமக்கா.

காலம் உருண்டோடியது. இந்திய இராணுவம் தமிழீழம் எங்கும் ஊடுருவியது. கனகமக்கா தன் மகனுக்காகவே தான் இன்னும் உயிரோடிருப்ப தாகக் கூறுவாள். அவனோ தன்னை இயக்கத் துடன் இணைத்துக் கொண்டான். என்னதான் இருந்தாலும் கனகமக்கா தானும் ஒரு சாதாரண தாயாக இருந்துவிட விரும்பவில்லை. அவன் தன்னை இயக்கத்துடன் இணைத்துக்கொண்டதை எண்ணி பெருமைப்பட்டுக் கொண்டாள்.

காடுகளுடன் அண்டிய அவ்வூ ரில் இந்திய இராணுவத்தின் பெரும் படைப்பிரிவு ஒன்று முகாமிட்டிருந்தது. இப்பிரிவைச் சேர்ந்த இராணுவம், கனக மக்கா தன் பிள்ளைகளைப் போல் நேசிக்கும் இயக்க வீரர் களை தேடி அழிப்பதில் ஈடுபட் டுக் கொண்டிருந்தது. இவ்விரா ணுவ நடமாட்டங்களை அவ்வப் போது அறிந்து இயக்க வீரர்க ளின் முகாம்களுக்குச் சென்று தெரிவிப்பதை தனது கடமை போல் செய்தாள்.

ஒரு நாள் ஊரின் எல்லையில் வைத்து மேஜர் கஜன் ஒரு அவசரக் கடிதத்தைக் கொடுக் கிறான். மின்வெட்டில் அதை ஒளித்துக் கொள்கிறாள் கனக மக்கா. "ஆமி அங்கால நிக்கு தக்கா கவனம்" கஜன் சொல் கிறான்.

வாயில் கொதப்பிய வெற்றிலை யுடன் வெடவெட என்று நடக் கத் தொடங்குகிறாள் கனக மக்கா. இந்திய கூலி இரா ணுவத்தினன் ஒருவன் கனகமக் காவை வழிமறித்து 'உந்தப் பக் கம் ஏன் போற' என்று கேட்கி றான். சற்றும் பதட்டமின்றி 'விறகு முறிச்சரப் போறன் சாமி' என்கிறாள் கனகமக்கா. இந்தியச் சிப்பாய் சிறிது ஐயத் துடனே அவளைப் போகச் சம் மதிக்கிறான்.

காட்டு வழிகளினூடாக நடந்து விடுதலைப் புலிகளின் முகா மைச் சென்றடைகிறாள். முகா மில் இருந்தவர்களின் இன்மு கம் கண்டு முகம் மலர்கிறாள். தான் பெற்ற பிள்ளைகளைவிட பாசம் பொங்க பழகுகிறாள். மேஜர் கஜனின் கடிதத்தை கொடுத்துவிட்டு மீண்டும் திரும் புகிறாள். வழியில் "நெரிஞ்சி யாக்கும் குத்திப் போட்டுது" என்றவாறு குனிந்தவள் முள்ளை எடுக்கும் போதுதான் உணருகிறாள் அம்முள் குத்தி யதை விட மீண்டும் எப்படி இந் திய இராணுவத்தினரைக் கடப் பேன் என்று நினைக்கிறாள். கையிலோ, தலையிலோ ஒரு தடி விறகு கூட இல்லை என்று பதட்டமடைகிறாள். காட் டில் பெரியதொரு புளியமரத்தின் பின்னால் மறைந்து கொள்கி றாள். பல மணி நேரத்தின் பின் கூலிப்பட்டாளம் அவ்வி டத்தை விட்டு நகர்ந்து சென் றது. அதன் பின்புதான் கனக மக்கா வீடு திரும்புகிறாள்.

இப்படிப் பலமுறை ஏமாந்த இராணுவம் கனகமக்கா மேல் சந்தேகிக்க ஆரம்பிக்கிறது. இராணுவத்துடன் ஒட்டிய துரோகக் கும்பலுடன் தேடப்ப டுகிறாள் கனகமக்கா. "என் னவாயிருந்தாலும் நீயும் பொம் பிளைதானேடி" என்று கூறும் மாமியாரின் வார்த்தைக்கு மதிப் பளித்து மாமியாருடன் அவளின் வீட்டில் தனது இருப்பை அமைத்துக் கொள்கிறாள் கன கமக்கா.

ஒருநாள் நடுச்சாமம் வாசல் கதவு தட்டும் சத்தம் கேட்கி றது. யாரது இந்த நேரத்தில் என தனக்குள் நினைத்துக் கொண்டு கதவை திறக்கிறாள் கனகமக்காவின் மாமியார். மாமியார் உடலெல்லாம் வெட வெடத்து நடுங்குகிறாள். கன கமக்கா துணிந்து விட்டாள். மரணமாயினும் தன்மானத்து டன் ஆகவேண்டும் என்றெண் ணினாள். கதவைத் திறந்ததும் உள்ளே வந்த இராணுவச் சிப் பாய் 'யாரடி கனகம்' என்கி றான். 'நான்தான் கனகம், என்ன வேணும்' என்கிறாள் கனகமக்கா. "நீ யாருக்கடி தூது போகிறாய்" என்று சத்த மிட்டவாறே கையிலிருந்த துப் பாக்கியை இயக்குகிறான். பல குண்டுகள் தாக்க நொடிப் பொழுதில் கனகமக்கா தாய் மண் மடியில் சாய்ந்தாள்.

துயருற்று அழும் குழந்தயைப் போல் கனகத்தின் மாமியார் அழுதாள். அந்த அழுகையி லிருந்து அவள் ஒரு விதி செய் யத் துணிந்தாள். துப்பாக்கி கட் டைகளோடு நிற்கும் இந்தியச் சிப்பாய்களை பழிவாங்கத் துடிக் கும் பார்வையோடு விழித்து "கனகத்தை மட்டுமில்லை நீ யாரைக் கொண்டாலும் நான் உன்னைக் கொல்லாமல் விட மாட்டனடா" என்று கர்ஜிக்கி றாள்.

கனகம் மடியவில்லை, அவ ளின் நினைவை எம் தாய்ப் பூமி தன் நெஞ்சில் ஆறாத காயமாக சுமந்து கொண்டெழுகின்றது. ■

- சூரியா

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வாசகர் கடிதப் பகுதி



# அக்கறைப்பூக்கள்

அன்பின் எரிமலைத் தோழர்களே,

தங்களின் கலை, கலாச்சார, அரசியல், சமூக ஏடு ஒன்று எனது நண்பனின் இல்லத்தில் பார்த்தேன். எரிமலை இதழை இத்தாலி, பழமூர்ப் பகுதியில் எல்லா இடங்களிலும் சீராக விநியோகம் செய்தால் நன்று. அநேக நண்பர்களுக்கு தெரியாமல் இருக்கின்றது. நல்ல விடயங்கள் அமைந்திருப்பதனால், யாவரும் வாசித்தால் பயன் அடைவார்கள்.
தங்களின் இதயபூர்வமான எரிமலைக்கு, என் இதயம் கனிந்த நல் வாழ்த்துக்கள்.

A. சோதி
PALERMO,
ITALY.

அன்பான எரிமலை ஆசிரியருக்கு,

சகல விதத்திலும் மக்களை புரட்சிப்பாதையிலும், ஒவ்வொரு மனிதனையும் சுதந்திரப் பாதையிலும் வழிநடத்த முனைந்துவரும் எரிமலைக்கு எனது வாழ்த்துக்கள்.
மேலும் எரிமலை பத்திரிகை, தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் மேற்கொள்ளும் பயணத்தில் பங்கெடுத்துக் கொள்ள ஆவல்கொண்டுள்ளேன்.

நன்றி, வணக்கம்.

இப்படிக்கு
எரிமலை விரும்பி
மா. டயந்தன்
FRANCE.

அன்பார்ந்த எரிமலை ஆசிரியருக்கு,

ஐயா,
எரிமலை புத்தகம் தொடர்ந்து வாசிக்கின்றேன். ஐரோப்பாவில் வெளிவரும் மற்றைய சஞ்சிகைகளை விட தரமாக இருக்கின்றது. இங்குள்ள மக்களுக்கு நமது போராட்ட வரலாற்றைப் பற்றியும், வீரர்களைப் பற்றியும் எடுத்துக்கூறுகின்றது. இன்றைய போராட்ட வேகத்தையும், அதனால் அடையும் வெற்றியையும் கூறுகின்றது. நான் பெருமைப்படுகின்றேன். 1991 ஆகஸ்ட் மாத இதழில் " பெண்களின் மீதான சமுதாய அழுத்தம் " பற்றி குயில் என்பவர் எழுதியிருந்தார்; வரவேற்கிறேன். பல திசையில் இருந்து பிரச்சனையை விளக்கியிருந்த குயில், ஒரு தாய் ஸ்தானத்தில் இருந்து எடுத்துக்கூற மறந்துவிட்டார். ஒரு தாய் தனது மகனை சந்தையில் விற்க பேரம்பேசுகிறாள். இதில் வியாபாரப் பொருள் பெண் இல்லை ஆண்தான்.

இங்கனம்
முல்லை நாயக்கர்.

அன்பின் தோழர்களுக்கு,

தங்களால் மாதம் ஒருமுறை பிரசுரமாகும் எரிமலை ஏடு எங்கள் கரங்களிலும் தவழ்கின்றது. தொடர்ந்தும் எங்கள் கரங்களில் எரிமலை சேர உங்கள் பணி தொடரவேண்டும்; அதற்கான நல் ஆசிகள்.

இப்படிக்கு
த. மணிவேந்தன்
RIADH
K. S. A.

அன்பு நண்பர்களுக்கு,

உங்களால் வெளியிடப்படும் எரிமலை இதழ், மாதா மாதம் புதுப் பொலிவுடன் வெளிவருகின்றது. துரிதமான வளர்ச்சியை கண்டு மனம் மகிழ்கின்றேன். போராட்டத்துக்கு எதிரான கருத்துக்களுடன் வளர முற்படும் களைகளுக்கு எதிராகப் போராடும் எனது பத்திரிகைக்கு எனது அன்பான முத்தங்கள். இன்னும், திருத்தங்களும், கூடியகவனமும் தேவை. ஒவ்வொரு இதழுக்கும் இடையில் பெரும் வளர்ச்சியைக் காணுகின்றேன். ஜேர்மனியில் எரிமலை இதழ் கூடியஅளவில் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கவும்.

நன்றி

ஜெயக்குமார்
மேற்கு ஜேர்மனி.

எரிமலையின், வளர்ச்சிப்போக்கின் ஒவ்வொரு படிநிலைகளிலும், உங்களது ஆக்கபூர்வமான, அக்கறையான சுட்டிக்காட்டல்களே உள்ளன என்பதை பெருமையோடும், மகிழ்ச்சியோடும் கூறிக் கொள்ளவிரும்புகின்றோம். இப்பத்திரிகை உங்கள் பத்திரிகை; இதன் வளர்ச்சியில் அக்கறைகொள்வதும், அதனை நெறிப்படுத்தி வளப்படுத்துவதும் உங்களது கடமையே. கதைகள், கவிதைகள், கட்டுரைகள், கேலிச்சித்திரங்கள் என்பன எதிர் பார்க்கப்படுகின்றன. ஆரோக்கியமான கடிதங்கள் எமக்கு தென்பூட்டும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## தமிழ்த் தேசப் பொதுவுடமைக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. பெ. மணிஅரசன் அவர்கள் எரிமலை இதழுக்கு அளித்த செவ்வி

# வரலாற்றில் சோதிக்கப்பட்ட அமைப்பாக விடுதலைப் புலிகள் அமைப்பு உள்ளது.



**கேள்வி:**

இந்தியா, தமிழகம் ஆகியவற்றின் எதிர்காலம் குறித்தான உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன?

**பதில்:**

இந்தியாவில் முக்கியமாக தேசிய இன, வர்க்க, வர்ண-சாதி ஒடுக்குமுறைகள் நிலவுகின்றன. இவற்றில் மிக அதிகமான ஒடுக்குமுறையாகவும் முற்றிவரும் முரண்பாடாகவும் தேசிய இன ஒடுக்குமுறையே இருக்கிறது என்று எங்களது தமிழ்த் தேசப் பொதுவுடமைக் கட்சி கருதுகிறது. முதன்மை ஒடுக்குமுறையாக உள்ள தேசிய இன ஒடுக்குமுறையைச் செய்வது பெரு முதலாளிகள் தலைமையிலான முதலாளிய-பார்ப்பனீய-இந்தி ஆதிக்க இந்திய அரசு. தமிழ்த் தேசிய இனம் இந்திய அரசின் ஒடுக்குமுறைக்கு உள்ளாகித் துன்புறுகிறது. பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமையைப் (சுயநிர்ணய உரிமையை) பெறுவதன் மூலமே இந்த ஒடுக்குமுறையிலிருந்து தமிழ்த் தேசிய இனத்தை விடுவிக்க முடியும்.

தேசிய இன ஒடுக்குமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் தன்னுரிமைப் போராட்டத்தின் ஊடாக, வர்க்க மற்றும் வர்ண-சாதி ஒடுக்கு முறைக்கு எதிராக போராட்டத்தைத் தொடர வேண்டும். அதாவது, முதன்மையான முரண்பாட்டைத் தீர்க்கும் போராட்டத்தின் ஊடாக அடுத்த நிலையில் உள்ள முரண்பாடுகளைத் தீர்க்கும் போராட்டத்தை இணைப்பது.

"தன்னுரிமைப் போருக்கு தமிழ்த் தேச வரலாற்றில் புதுயுகம் படைப்போம்."

என்பதே எங்கள் கட்சியின் குறிக்கோள் முழக்கம்.

தன்னுரிமைக்கான இயக்கம் தமிழ்நாட்டில் அரும்பி வளர்ந்து வருகிறது. எதிர்காலத்தில் தன்னுரிமை இயக்கமே தமிழகத்தின் பிரதான அரசியல் நீரோட்டமாகப் பெருகப் போகிறது.

காஷ்மீரி, பஞ்சாபி, அஸ்ஸாமி தேசிய இனங்கள் நடத்தும் தன்னுரிமைப் போராட்டங்கள் வளர்ச்சி அடைந்த நிலையில் இருக்கின்றன. இந்த நிலையில் தன்னுரிமைக்கான போராட்டமே இந்தியாவில் பிரதான போராட்டமாக வளர்ந்துள்ளது.

எல்லா தேசிய இனங்களும் பிரிந்து போகும் உரிமையுடன் தன்னுரிமையை வழங்கி, அவற்றின் விருப்பத்தின் அடிப்படையில் அமைந்த கூட்டாட்சியாக இந்தியாவை மாற்றி அமைப்பதே இந்தியாவின் எதிர்காலத்திற்கு நல்லது.

இவைதான், தமிழகம் மற்றும் இந்தியாவின் எதிர்காலம் பற்றிய எங்கள் நிலைப்பாடு.

**கேள்வி:**

உங்களது கட்சியின் அடிப்படைக் கொள்கை என்ன?

**பதில்:**

தமிழ்நாட்டிற்குத் தன்னுரிமை பெறுவது, தமிழகச் சூழலுக்கு ஏற்ற முறையில் படிப்படியாக சோஷலிசத்தை நோக்கி தமிழ்ச் சமூகத்தை முன்னேற்றுவது, தமிழ்ச் சமூகத்தில் வர்ண-சாதி ஒடுக்குமுறையை நீக்கி சமூக நீதியை நிலைநாட்டுவது, பண்பாட்டுப் புத்தெழுச்சி, பெண்விடுதலை, சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு, தேசிய இன விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவளிப்பது, ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆகியவை எங்கள் கட்சியின் அடிப்படைக் கொள்கைகள்.

தமிழ்நாட்டில் இதுவரை வளர்ந்துள்ள முற்போக்கான சிந்தனைகளை உள்வாங்கிக் கொண்ட - மண்ணுக்கேற்ற மார்க்சியம் எங்கள் கட்சிக்கு வழிகாட்டும் நெறியாகும். மார்க்சியத்தை ஒருவாய்ப்பாட்டாகவோ அல்லது பிறநாட்டு நடைமுறையின் நகலாகவோ அணுகாமல் சொந்தப்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



படைப்பாற்றலுடன் அத் தத்துவத்தைப் பயன்படுத்துவது எங்கள் அணுகுமுறையாகும். சோவியத் ஒன்றியம் உள்ளிட்ட பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிகள் வீழ்ச்சி அமைந்ததில், உரிய பாடங்களை நாங்கள் கற்றுக் கொள்கிறோம். மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போது அந்நாட்டில் ஏற்பட்ட தவறுகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு தேவையான திருத்தங்களைச் செய்து செழுமைப் படுத்துவது என்பதும் எங்கள் அணுகுமுறை. பின்னர் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பதைக் கைவிட்டு பல கட்சி முறையை ஏற்றுக்கொள்வது.

**கேள்வி:**

உலகில் நடைபெறுகின்ற சுய உரிமைக்கான போராட்டங்கள் குறித்து உங்கள் கருத்து என்ன?

**பதில்:**

உலகில் இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலும், நடுவிலும் நடந்த தன்னுரிமைப் போராட்டங்களுக்கும் இறுதிப் பகுதியான தற்போது நடைபெறும் தன்னுரிமைப் போராட்டங்களுக்கும் இடையில் வேறுபாடு உள்ளது. அன்று பெரிதும் காலனிய ஆட்சியில் இருந்த தேசிய இனங்கள் தன்னுரிமைக்குப் போராடின. இன்று பெரிதும் முன்னாள் காலனிகளுக்குள் இருக்கும் இந்நாள் காலனிகள் தன்னுரிமைக்காகப் போராடுகின்றன. பழைய காலனிக்குள் புதிய காலனிகள் சிக்கிக் கொண்டதும் ஏகாதிபத்தியங்கள் விட்டுச் சென்ற "பரம்பரை-நோயின்" பின் தொடர்ச்சியே!

ஏகாதிபத்தியங்கள் உலகைப் பங்கு போட்டுக் கொண்ட போது, துப்பாக்கி முனையில் எல்லைக் கோடுகள் கீறி, வரலாற்றில் புதிய நாடுகளை உருவாக்கின. இந்தப் "புதிய நாடுகள்" ஒவ்வொன்றிலும் பல்வேறு தேசங்களும் தேசிய இனங்களும் பிணைக்கப்பட்டன. காலப் போக்கில், பொது எதிரியான ஏகாதிபத்தியத்தை எதிர்த்து "புதிய நாட்டில்" இருந்த தேசிய இனங்கள் ஒன்று சேர்ந்து போராடின.

ஏகாதிபத்தியங்களிடமிருந்து விடுதலை அடைந்த பின்னர், இந்த நாடுகளில் உள்ள தனிப்பெரும்பன்மை மக்கள் தொகை கொண்ட தேசிய இனம் தன்நாட்டில் உள்ள சிறுபான்மைத் தேசிய இனங்களை ஒடுக்கத் தொடங்கின. பேருக்கு ஒரு கூட்டாட்சியை வைத்துக் கொண்டோ அல்லது ஒற்றை ஆட்சியை வைத்துக் கொண்டோ ஒடுக்குகின்றன.

அன்று, வெறும் துப்பாக்கி தேசத்திற்கு எல்லை கோலியது; இன்று வாக்குச் சீட்டு சுற்றப்பட்ட துப்பாக்கி அந்த எல்லையைக் கட்டிக் காக்கிறது. ஏகாதிபத்தியத்தால் உருவான செயற்கைத் தேசியம் இயற்கைத் தேசியத்தை விழுங்கிவிட்டது. (எ. டு. இலங்கைத் தேசியம் ஈழத் தேசியத்தை மறுப்பது.) அன்று சுதந்திர முழக்கமே 'தேசத்தின் மூச்சு' என்றவர்கள் இன்று சுதந்திரம் என்றாலே 'தேசம் போச்சு' என்கிறார்கள். பழைய 'அடிமைகளில்' ஒரு பகுதியினர் புதிய 'எஜமானர்கள்' ஆனார்கள்; மறுபகுதியினர் 'புதிய அடிமைகள்' ஆனார்கள்.

புதிதாக விடுதலை அடைந்த பல்தேசிய இன நாடுகளில், இன்று நடைபெறும் புதிய தன்னுரிமைப் போராட்டங்கள் ஒடுக்குமுறைக்கு எதிரானவை; ஜனநாயக உள்ளடக்கம் கொண்டவை; சமூக வளர்ச்சியின் ஒரு கட்டத்தைக் குறிப்பவை. இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளில் நடைபெறும் தன்னுரிமைப் போராட்டங்கள் இதற்கான சில எடுத்துக் காட்டுகள்.

பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் அதனின்றும் மாறுபட்ட இன்னொருவகை. அங்கு புதிதாக உருவாக்கப்பட்ட சுதந்திர இஸ்ரேல் பாலஸ்தீனத்தின் சுதந்திரத்தை விழுங்கியது.

அடுத்து, வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடான கனடாவிலும் சோஷலிச நாடுகளாக இருந்த சோவியத் ஒன்றியம் மற்றும் யூகோஸ்லாவியாவிலும் எழுந்த தன்னுரிமைப் போராட்டங்கள்.

**ஒரு புரட்சிகர இலட்சியத்தை அடைய ஒரு புரட்சிகர அமைப்புத் தேவை. புரட்சிகர அமைப்பாக விடுதலைப் புலிகள் அமைப்பு உள்ளது. வரலாற்றில் சோதிக்கப்பட்ட அமைப்பாக இது உள்ளது.**

இவ்வளவு வளர்ச்சியடைந்த பல்தேசியக் கூட்டாட்சியிலும் பெரும்பான்மை தேசிய இனம் தன்னிலும் சிறுபான்மையாய் உள்ள தேசிய இனங்களுக்கு சமத்துவம் வழங்கவில்லை என்பதையே காட்டுகிறது. இதனால் கூட்டாட்சி முறையே கேள்விக்குரியதாகி உள்ளது.

ஜனநாயகம், கருத்துரிமை போன்ற உரிமைகள் பற்றி வானளாவப் பேசும் பிரிட்டன், ஐரிஷ் தேசிய இன மக்களுக்கு தன்னுரிமையை நிராகரித்து

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





**இந்தியாவின் ஆதரவுடன் பிறந்து இந்தியாவின் நட்பு நாடாக விளங்கக்கூடிய தனிஈழம் கொடுக்கும் உந்து சக்தியை விட, இப்போது இந்தியப் படையை எதிர்த்துப் போராடி திருப்பி அனுப்பிவிட்டு, சிங்களப்படையுடன் போராடி முன்னேறும் விடுதலைப் புலிகளின் போர் அதிக உந்து சக்தியை இந்தியாவில் போராடும் தேசிய இனங்களுக்கு அளிக்கிறது.**

ஒற்றை ஆட்சி முறையை வைத்துள்ளது. சோஷலிச சீனமோ தீபேத்தியர்களின் தன்னுரிமையை மறுக்கிறது; ஒற்றை ஆட்சிமுறையை வைத்துள்ளது.
இவ்வாறாக தன்னுரிமைப் போராட்டங்களில் பல வகைகள் இருக்கின்றன.
சோஷலிசத்தை அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகக் கொண்டுள்ள த.-தே.பொ.க ஒரு தேசிய இனம் சோஷலிச சமூக அமைப்பில் இருக்கிறதா என்பதை விடவும் அது சுதந்திரமாக இருக்கிறதா என்பதையே முதல் கேள்வியாக வைக்கவேண்டும் என்று கருதுகிறது. எனவே, சோஷலிச நாடுகள் உள்ளிட்டு உலகெங்கும் நடைபெறும் தன்னுரிமைப் போராட்டங்களை ஆதரிக்கிறது. இன்று உலக அளவில் போராடும் சக்திகளாக ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களே திகழ்கின்றன. ஒடுக்குமுறை, எதேச்சாதிகாரம், சுரண்டல் ஆகியவற்றை எதிர்க்கும் அனைத்து ஜனநாயகவாதிகளும் மார்க்சீய வாதிகளும் இப்போராட்டங்களை ஆதரிக்க வேண்டும்.

**கேள்வி:**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் எந்தக் கண்ணோட்டத்தோடு நோக்குகின்றீர்கள்?

**பதில்:**

இரண்டு தேசிய இனங்கள் வாழுகின்ற இலங்கையில் பேருக்குக் கூட ஒரு கூட்டாட்சி இல்லை. இதிலிருந்தே, சிங்களப் பேரினவாதிகளின் ஒடுக்குமுறையும் சுரண்டலும் எவ்வளவு மூர்க்கத்தனமானவை என்பதைப் புரிந்துகொள்ளலாம்.
ஒடுக்கப்பட்ட ஈழத்தமிழர்கள் பொங்கி எழுந்த போதெல்லாம், பேச்சுவார்த்தை, ஒப்பந்தம், என்று நடித்து நயவஞ்சகம் புரிந்து பின்னர் இராணுவம் கொண்டு தாக்கிய சிங்கள அரசியல் தலைமைகளும், தமிழர் தன்னுரிமை முழக்கத்தை மூலதனமாக்கி 'நாற்காலி அரசியல்' நடத்திய தமிழர் தலைவர்களும் ஈழவிடுதலைப் போராட்டம் ஆயுதந் தாங்கிய வழியில் செல்ல நிர்ப்பந்தித்த காரணிகளாகும்.
ஒரு தேசிய இனத்துக்குரிய அனைத்து அம்சங்களையும் கொண்டுள்ள ஈழத் தமிழர்கள் தங்களுக்குரிய தேசத்தை அமைத்துக் கொள்ள முழு உரிமை படைத்தவர்கள். ஒரு புரட்சிகர இலட்சியத்தை அடைய புரட்சிகர அமைப்புத் தேவை. புரட்சிகர அமைப்பாக விடுதலைப் புலிகள் அமைப்பு இருக்கிறது. வரலாற்றில் சோதிக்கப்பட்ட அமைப்பாக அது உள்ளது.
"இதனை இதனால் இவன் முடிக்கும்
என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்,"

**கேள்வி:**

தற்போதைய புவிசார் அரசியல் நிலைமைகளில் இந்தியாவின் பாத்திரம் எந்த வகையில் உள்ளது? எதிர்காலத்தில் எந்த நிலையை அடையும்? உங்கள் கருத்து என்ன?

**பதில்:**

புவிசார் அரசியலில் இந்தியாவின் பாத்திரம் தோல்விக்குரியதாகவே இருக்கிறது. நீண்டகாலமாகவே இதுதான் நிலை. இப்போது தெற்காசிய கூட்டுறவுச் சபையே (சார்க்) சிதையும் நிலை ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணமாக இந்தியாவைச் சுட்டி விரல் நீட்டப்படுகிறது. பூட்டானைத் தவிர பக்கத்து நாடுகள் எதனுடனும் நல்லுறவு இல்லை.
இலங்கைப் பிரச்சனையில் கூட, இந்திய அரசு சிங்களர்களுக்கும், தமிழர்களுக்கும் ஒரே நேரத்தில் பொது எதிரியாகியுள்ளது.
இப்படிப்பட்ட பின்னணியில் தெற்காசியாவில் பிராந்திய வல்லரசாக, இந்தியாவிற்கு வாய்ப்பில்லை. ஆளும் வர்க்கத்திற்கு அப்படி ஒரு ஆசை இருக்கலாம்; அது நடக்காது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



இந்துமாக் கடல் பகுதியை அமைதி மண்டலமாக்கும் முயற்சியில் கூட இந்திய ஆளும் வர்க்கத்திற்குக் கூடுதலான அக்கறை கிடையாது. ஏனெனில், அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் நட்புறவு வைத்துக்கொண்டு, உள்நாட்டைச் சுரண்டுவது, வெளிநாட்டுச் சந்தை தேடுவது என்பதே அவர்களின் பொருளாதார உத்தியாக உள்ளது.

இலங்கைக்குப் படை அனுப்பியதில், இந்தியாவின் புவிசார் அரசியலை விட உள்நாட்டு அரசியலே முக்கிய பாத்திரம் வகிக்கிறது.

தனி ஈழம் அமைந்து விட்டால், அது இந்தியாவில் தனித்தமிழ்நாடு உருவாக உந்து சக்தியாகும்; காஷ்மீர், பஞ்சாப், அஸ்ஸாம் விடுதலைப் போராட்டங்களுக்கு பெரும் நம்பிக்கை அளிக்கும் என்று இந்திய அரசு அஞ்சுகிறது. ஈழவிடுதலையை எதிர்க்கிறது. இந்திய ஆட்சியாளர்கள் புவிசார் அரசியலுக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்திருந்தால் ஈழத்தை அங்கீகரித்து நட்பு நாடாக்கிக் கொண்டிருக்க வேண்டும்.

**ஈழப் பிரச்சனையில் இந்தியாவின் அணுகுமுறையை மேற்கத்தைய அரசுகளும் அனுசரிப்பதற்குக் காரணம், ஈழத்தை விடவும் இந்தியா பல மடங்கு பெரிய சந்தை என்பதுதான். இப்பிரச்சனையில் இந்தியாவின் உரசல் வேண்டாம் என்று அவை நினைக்கின்றன. வெளிநாடுகளில் இந்தியாவிற்கு ராஜதந்திர மதிப்பைவிட சந்தை மதிப்பே அதிகம்.**

இந்தியாவின் ஆதரவுடன் பிறந்து இந்தியாவின் நட்பு நாடாக விளங்கக் கூடிய தனி ஈழம் கொடுக்கும் உந்து சக்தியை விட, இப்போது இந்தியப் படையை எதிர்த்துப் போராடி திருப்பி அனுப்பிவிட்டு, சிங்களப் படையுடன் போராடி முன்னேறும் விடுதலைப் புலிகளின் போர் அதிக உந்து சக்தியை இந்தியாவில் போராடும் தேசிய இனங்களுக்கு அளிக்கிறது. மிக முக்கியமானது, தமிழ்நாட்டின் தன்னுரிமைக் கோரிக்கையோ, பஞ்சாப், காஷ்மீர், அஸ்ஸாம் விடுதலைப் போராட்டங்களோ அடிப்படையில் ஈழப்போராட்டத்தைச் சார்ந்தவை அல்ல. இவை தங்கள் நாட்டுப் பிரச்சனைகளின் அடிப்படையில் எழுந்தவை.

பொதுவாக, உள்நாட்டு பிரச்சனைகளில் ஆழமாக சிக்கிக் கொண்டுள்ள ஒரு நாடு வெளிநாட்டுப் பிரச்சனைகளில் வெற்றி ஈட்ட முடியாது. இந்தியாவிற்கு இது பொருந்தும். வருங்காலத்திற்கூட, புவிசார் அரசியலில் இந்தியாவால் குறிப்பிடத்தகுந்த பாத்திரம் வகிக்க முடியாது.

ஈழப் பிரச்சனைகளில் இந்தியாவின் அணுகுமுறையை மேற்கத்தைய அரசுகளும் அனுசரிப்பதற்குக் காரணம், ஈழத்தை விடவும் இந்தியா பல மடங்கு பெரிய சந்தை என்பதுதான். இப்பிரச்சனையில் இந்தியாவின் உரசல் வேண்டாம் என்று அவை நினைக்கின்றன.

வெளிநாடுகளில் இந்தியாவிற்கு ராஜதந்திர மதிப்பை விட சந்தை மதிப்பே அதிகம்.

**"விடுதலைப் புலிகள் எதிர்ப்புப் பிரச்சாரம்" செய்வோர் கூட 'நாங்கள் ஈழம் அமைவதை எதிர்க்க வில்லை; விடுதலைப் புலிகளைத்தான் எதிர்க்கிறோம் 'என்கிறார்கள். ஏனெனில், தனி ஈழத்திற்கு தமிழகத் தமிழர்களிடையே உள்ள ஆதரவு அவ்வளவு வலுவானது. விடுதலைப் புலிகள் இல்லாமல் தனிஈழம் அமைய வாய்ப்பில்லை என்று தெளிவாகப் புரிந்து வைத்துள்ள தமிழ் மக்களிடம் இவர்களின் எதிர்ப்பிரச்சாரம் எடுபடாது.**

**கேள்வி:**

தமிழகத்தில், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான பிரச்சாரங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இந்தவகைப் பிரச்சாரங்களுக்கான உள்நோக்கம் என்ன?

**பதில்:**

தமிழகத்தில் தமிழீழ விடுதலைக்கு எதிரான பிரச்சாரங்களை நேரடியாக முடுக்கி விடமுடியாது. ராஜீவ் காந்தி கொலையை ஒரு சாக்காக வைத்து, விடுதலைப் புலிகளுக்குத் தமிழ் நாட்டில் இடம் இல்லை என்ற பிரச்சாரத்தையும் அடக்குமுறையையும் முடுக்கிவிட்டுள்ளனர். இது ஈழவிடுதலையை எதிர்க்கும் நோக்கம் கொண்டது.

ஈழவிடுதலைக்கு எதிராக இவ்வாறு பிரச்சாரம் செய்வோரின் உள்நோக்கம் இதுதான்:

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




ஈழவிடுதலைப் பேராட்டம் தமிழ் நாட்டில் தமிழ், தமிழன் என்ற மொழி-இன உணர்வுகளுக்கு ஊக்கம் கொடுக்கிறது. தமிழகத்தின் தன்னுரிமைப் போராட்டத்திற்கும் ஊக்கம் கொடுக்கும். 'இந்தியன்' என்ற செயற்கையான ஒரே தேசிய இனப் போர்வையைப் போர்த்திவிட்டு கூடுதலான அரசியல், பொருளாதார, சமூகப் பலன் அடையும் பெருமுதலாளிய-பார்ப்பனீய-இந்தி ஆதிக்க சக்திகளும் அவர்களை அண்டிப் பிழைக்கப் போகும் தங்கள் 'வியாபாரத்துக்கு' ஆபத்து வருகிறது என்று அஞ்சுகிறார்கள். இவர்கள் தமிழர்களின் இன உணர்ச்சிக்கும் உரிமைக்கும் எதிரிகள்.

கண்மூடித்தனமாக "விடுதலைப் புலிகள் எதிர்ப்புப் பிரச்சாரம்" செய்வோர் கூட, 'நாங்கள் ஈழம் அமைவதை எதிர்க்கவில்லை; விடுதலைப் புலிகளைத்தான் எதிர்க்கிறோம்' என்கிறார்கள். ஏனெனில், தனி ஈழத்திற்கு தமிழகத் தமிழர்களிடையே உள்ள ஆதரவு அவ்வளவு வலுவானது. விடுதலைப் புலிகள் இல்லாமல் தனி ஈழம் அமைய வாய்ப்பில்லை என்று தெளிவாகப் புரிந்து வைத்துள்ள தமிழ் மக்களிடம் இவர்களின் எதிர்ப்பிரச்சாரம் எடுபடாது.

**கேள்வி:**

தமிழீழத்திற்கும், தமிழ் நாட்டிற்குமான தொடர்புகள் என்ன? உறவுகள்?

**பதில்:**

ஈழத் தமிழர்களும் தமிழகத் தமிழர்களும் ஒரே இனம். இவர்களின் தாய் மொழியும் ஒன்றே. நாடுகள் தனித்தனி. அரபுகளுக்குப் பல நாடுகள் இருப்பது போல் தமிழர்களுக்கு இரு நாடுகள்.

தமிழ் ஈழ விடுதலைப் போரை ஆதரிப்பது தமிழகத் தமிழர்களுக்கு ஒரு தார்மீகக் கடமை மட்டும் அல்ல; ஒரு சகோதரக் கடமையும் பிறப்பு உரிமையும் ஆகும்.

ஆனால் ஈழவிடுதலைப் போராட்டமும் தமிழகத்தின் தன்னுரிமைப் போராட்டமும் களம், காலம், உள்ளடக்கம், வடிவம் இவற்றால் வேறுபட்டவை. ■

## புறநானூற்றில் இல்லாதவை - தாய்மைகளின் வீரம்.



யாழ்நகரில் உள்ள மகளிர் பாடசாலை ஒன்றில், ஒரு பெண்புலியின் புகழுடல் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கிறது. அலங்கரிக்கப்பட்ட பேழையில் நீள்துயில் கொள்ளும் அந்த வீரப்பெண்ணை அஞ்சலிக்க கனத்த இதயங்களுடன் மக்கள் ஒழுங்காக வந்துகொண்டிருக்கின்றனர். புரட்சிக்கீதங்கள் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. உணர்வுகளை கிளர்ந்தெழவைக்கும் உயிருள்ள சூழ்நிலை. வீரமரணமடைந்துவிட்ட அப் பெண்புலியின் உயிரற்ற உடலுக்கு அருகில் இருந்து, தந்தையார் குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தார். சிறுபிள்ளையைப்போல் தேம்பினார். "பிள்ளை இல்லயெண்ட கவலை வேறொன்றுமில்லை; எனி என்னை யார் பார்க்கிறது" தோள் துண்டையெடுத்து முகத்தை மறைத்துக்கொண்டு தனது வேதனைகளை கொட்டிக் கொண்டிருந்தார். ஆனால், சலனமற்ற உறுதியான முகத்துடன், சிறியவயதிலேயே ஒரு வீரவரலாறு படைத்துவிட்ட தன் மகளை எண்ணி பெருமிதம் கொண்டவராய், தாய் நிமிர்ந்து நின்றார். அவர் தன் சோகத்தை வெளிக்காட்டவில்லை . குலுங்கியழும் தன் கணவனைப் பார்த்து "அழாதே" ; குரல் காரமாக ஒலிக்கின்றது. "அவா போனதைப் பற்றி எங்களுக்கு அவ்வளவு கவலை இல்லை; அவா நாட்டுக்காகத்தானே போனவா" அத்தத் தாயின் உறுதியான வார்த்தைகள், இது போன்ற ஆயிரமாயிரம் தாய்மைகளின் வீரப் பிரகடனங்கள் எங்கள் தேசவயல்களை ஈரமாகவே வைத்திருக்கும்; வீரப்பயிர் செழிக்க.

(ஆதாரம் B. B. C - INSIDE STORY)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# வாழப் பிறக்கும்

சிறுகதை

வசந்தன்

சூரியன் அந்தச் சின்னக் கடலிற்குள் விழத் தொடங்கியது. மாலை நேரத்துச் சிவப்புக் கதிர்கள் அச்சிறு கடலில் பட்டுத் தெறித்துக்கொண்டிருந்தன. கருநிழலாக சில மனிதர்கள் தண்ணீருக்குள் நின்று நாளைய வாழ்வுக்காக வலைகளை வீசி எறிந்தனர்.

தேவி, தன்வீட்டு முற்றத்தில் மகனுடன் இருந்தாள். அவர்கள் மண்ணினால் அழகான வீடு கட்டிக் கொண்டிருந்தார்கள். தேவியின் கை தற்செயலாக அந்த மண்வீட்டை உடைத்து விட்டது!

"நீங்கள் உடைச்சுப் போட்டீங்கள்" அவன் சிணுங்க வெளிக்கிட்டான்.

தேவி சமாளிக்கத் தொடங்கினாள்.

தம்பி வளர்ந்து, அம்மாவிற்கு கல்வீடு கட்டித் தருமாம்."

"அம்மா கல்வீட்டை உடைக்க மாட்டாவாம்"

சூரியன் முற்றாக கடலில் விழுந்தான். தென்னைகள் சிலிர்த்து ஒருகணம் சோகம் தெரிவித்தன.

பறவைகளும், கடலும், காடும் அமைதியாகின.

அந்த நேரம், நெஞ்சை உலுக்கும் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. அவள் வானத்தை நிமிர்ந்து பார்த்தாள். நான்கு உலங்கு வானூர்திகள் அந்தக் கிராமத்தைத் தான்.

"அம்மா, நாலு. . . ." அவன் சந்தோசமாகக் கூவினான்.

அவளுக்கு நெஞ்சு படபடத்தது.

அவை நாலும் தாழப்பதிந்து, நிலத்திற்குத் தாவின.

தேவி, அவனின் கையை இறுகப்பற்றி இழுத்துக் கொண்டு ஓடத் தொடங்கினாள்.

அவனிற்கு என்னவென்று விளங்கவில்லை. ஆனால் கலவரத்துடன் ஓடினான். பின்னால், வெடிச்சத்தங்கள் கேட்டன. கிராமம் சுவாலை விட்டு எரியத் தொடங்கியது. அந்தக் கிராமத்திலிருந்து அவலமான குரல்கள், எழுந்து காற்றில் கலந்தன.

காட்டிற்கு அருகில் வந்ததும், தேவி திரும்பிப் பார்த்தாள்.

"ஐயோ, எரிக்கிறாங்கள்"

அவளது வாய் முணுமுணுத்தது. அதுவரையில் பேசாமல் வந்த தம்பி கேட்டான்:

"அம்மா, அப்பாவும், தங்கச்சியும் எங்க?"

அவையள் வருவினம்.

எங்கட வீடு.

"சத்தம் போடாதையப்பன், காட்டுக்கையும் அவங்கள் நிப்பாங்கள்" தன் மகனை அணைத்தபடியே தேவி ஒரு பற்றைக்குள் பதுங்கினாள்.

இரவு முழுவதும் அவள் விழித்திருந்தாள். கிராமம் எரிந்து

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கொண்டிருந்தது. இடை இடையே, துப்பாக்கி வேட்டுக்களும், அவலக்குரல்களும் எழுந்து மறைந்தன. காட்டினுள் தூரத்தில் எங்கேயோ, பறவைகளின் அவலமான சத்தங்கள் எழுந்தன. மனம் நடுங்கியது.

டத்திலே போய் இருக்கிறாங்கள். அவளவை இரவிரவா கத்திறாளவை. சீ, உந்த அறுவான்களை ஆர்தான் கேக்கிறது," அந்தக் கிழவர் சினந்து கொண்டிருந்தார். "வா, பிள்ளை போவம்" அவர்கள் ஒற்றையடிப்பாதையால் நடந்தார்கள்.



காட்டிற்குள்ளும் அவர்கள்....

இரவு அவள் தூங்கவே இல்லை. விடிந்தது, சத்தம் எதுவுமே இல்லை.

"அவங்கள் போயிட்டாங்களே" தேவி பற்றையை விட்டு வெளியே வந்தாள். மாரிகாலத்து நில ஈரம் உடலை குளிர வைத்திருந்தது, தம்பி சோர்ந்து போயிருந்தான், லேசாகக் காய்ச்சல் காய்ந்தது, உடல் படபடவென நடுங்கியது.

"தம்பி பயப்பிடாத, வீட்டை போவம்" சதுப்பு நிலத்தில் அவள் காலெடுத்து வைத்தாள். அப்பொழுது ஊரவர்கள் நாலுபேர் ஓடிவந்தார்கள்.

"பிள்ளை உங்கை போகாதை, அங்கை ஏராளமான ஆக்களைச் சுட்டுப் போட்டாங்கள்" வயது முதிர்ந்த கிழவர் ஒருவர் அவசரமாகச் சொன்னார்.

"பொம்பிளையளை எல்லாம் பிடிச்சுக் கொண்டு பள்ளிக்கூ

ஆற்றங்கரையில் அவர்களின் ஊரவர்கள் பலர் இருந்தனர். அவர்களின் முகங்கள் பயத்தால் வெளிறி இருந்தன. இரவு முழுவதும் விழித்திருந்ததால் சோர்ந்து களைத்திருந்தார்கள்.

"ஊருக்கு எனிப் போகேலாது, அவன் நிரந்தரமாக இருந்திட்டான். நாங்கள் கொக்கிளாய்க்குப் போவம்" முதியவர் ஒருவர் அங்கிருந்தவர்களுக்கு வழிகாட்டியாக நடந்தார்.

அவர்கள் காடுகளிலும், வெட்டைகளிலும், பதுங்குவதும் நடப்பதுமாக இருந்தார்கள். எவருமே எதுவுமே பேசவில்லை. சிலவேளைகளில் சின்னக் குழந்தைகள் கத்த ஆசைப்படும். அந்தக் குரல் கூட தாயின் கண்ணீருக்கிடையே பலவந்தமாக அடக்கப்படும். மனதில் சோகத்துடனும் பயத்துடனும் அவர்கள்

மௌனமாக நடந்தார்கள்.

தம்பி மட்டும் சில நேரங்களில் "அம்மா பசிக்குது" என்பான். பேசாமல் வா என அவளது மென்மையான குரல் முரட்டுத்தனமாக அவனை அடக்கும். இரவுகளில் மட்டும் அவன் நித்திரை ஆனபின், தன் மகனின் தலையைத் தடவிக் கொண்டே அவள் விம்மி, விம்மி அழுவாள். சிலநேரங்களில் ஏதோ ஒரு கொஞ்ச உணவு காட்டில் தேங்கி கிடக்கும் தண்ணிதான் அவர்களின் வயிற்றை நிரப்பியது.

"ஊர் தெரியுது இனிப் பிரச்சனை இல்லை" என்றான் ஒருவன். தம்பி கத்தினான். "அங்க அப்பாவும் தங்கச்சியும்" கத்திக் கொண்டே ஓடினான். தேவி அழத் தொடங்கினாள். மகிழ்ச்சியாலும், நிம்மதியாலும், துயரத்தாலும் அழத் தொடங்கினாள்.

"ஏன் அழுகிற பிள்ளை, எனித்தான் பிரச்சனை இல்லையே" கிழவி ஒருத்தி மங்கிப்போன கண்களை மலர்த்திய படியே சொன்னாள், அப்பொழுது தூரத்தில் வெடிச் சத்தங்கள் எழுந்தன. ஒருவன் தலைதெறிக்க ஓடிவந்தான்.

"ஆமிக்காரன் கண்டவங்களை எல்லாம் சுடுறான் ஊரை விட்டு 24 மணி நேரத்திற்க வெளியேற வேண்டுமாம். கொக்கிளாயில இருந்து, செம்மலை, குமளமுனை வரை எல்லாச் சனமும் அகதியாய்ப் போகுதுகள்" என மூச்சு விடாமல் சொல்லி முடித்தான்.

அவர்களின் முகங்கள் சோர்ந்து கறுத்தன. தலையைக் குனிந்தபடியே முல்லைத்தீவை நோக்கி எழுந்து நடந்தனர்.

எங்களின் மண்ணுக்கு வந்து, எங்கட வாழ்வுக்காக நாங்கள் உழைக்கும் வரைக்கும், எனி நாங்களும் அகதிகள்.

*** *** ***

புதிய கிராமம் தம்பிக்கு பிடிக்கவில்லை. அவர்கள் அம்மம்மாவின் வீட்டில் நின்றார்கள். இயக்கத்தில் இருக்கும் சின்ன மாமா சில வேளைகளில் தம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


பியையும், அம்மம்மாவையும் பார்க்க வருவார். தம்பிக்கு மாமாவின் தோளில் தொங்கும் துவக்கில்தான் ஒருகண். அன்றும் மாமா வந்திட்டுப் போனார்.

தேவி எங்கேயோ போயிட்டு வந்தாள். தம்பி வாசலுக்கு ஓடினான். அம்மாவை அணைத்துக் கொண்டான்.

"மாமா வந்தவர்" என்றான்.

"என்னவாம்"

"என்னையும், அம்மம்மாவையும் பார்க்கத்தான் வந்தவர்" என்றான், தம்பி.

"மாமாட்டை நீ என்ன கேட்டனி."

"எனக்கொரு துவக்கு வேணும் என்று கேட்டனான்"

"ஏன் தம்பிக்கு துவக்கு"

"எங்கட வீட்டை போறதெண்டால் அது வேணுமெண்டு சொன்னீங்களல்லோ, அதுதான், மாமாவிடம் கேட்டனான்" தன் பிள்ளையை எட்டி அணைத்தபடியே தேவி மெல்லமாகச் சொன்னாள்.

"அதுக்கு நீ மாமாவை மாதிரி வளரவேணும், படிக்க வேணும்" "படிக்கிறதோ" தம்பி பறித்துக் கொண்டு ஓடினான், வாசலில் படுத்திருந்த நாய் அவனுடன் எழுந்து ஓடியது!

"ஏனம்மா"

"முத்தத்தில் உழக்கக் கூடாதடா"

"ஏன்"

"முத்தத்தைப் பார்......

இதுதான் மாமாவின்ர காலடி, இதை அழிக்கக் கூடாது"

"நீ வா, வாப்பன்" அவன் அம்மாவிற்கு பின்னால் நடந்தான். நாய் அவனின் காலிற்குள் செல்லமாக தடக்கி விழுந்தது, அவன் ஓடிச்சென்று அம்மாவின் கையைப் பிடித்தான்.

"என்ர அம்மா நல்ல வடிவு" என்றான் தம்பி.

"அப்ப வீடு" அவனை இழுத்தபடியே தேவி கேட்டாள்.

"எந்த வீடு" தம்பி வியப்புடன் கேட்டான்.

"அதுதான் ஊரில நாங்கள் இருந்தம்"

"எங்கட வீடும் நல்லது" என்றான் தம்பி.

"வீட்டுக்கு முன்னால் இருக்கிற கடல்" அம்மா தொடர்ந்து கேட்டாள்.

"அதுவும் வடிவு, எனக்கு நல்ல விருப்பம்" திடீரென கதைத்துக் கொண்டு வந்த, தம்பியைக் காணவில்லை. சத்தத்தையும் காணவில்லை. அம்மா திரும்பிப் பார்த்தாள், தம்பியின் முகம் மாறி இருந்தது. ஏதொ யோசனையில் வந்துகொண்டிருந்தான்.

"மாமா வர ஒரு துவக்கு கேக்கத்தான் வேணும்" அவன் முணுமுணுத்துக் கொண்டுவந்தான்.

*** *** ***

தம்பி இப்போது கொஞ்சம் வளர்ந்திருந்தான். உலகம் ஓரளவு விளங்கத் தொடங்கி இருந்தது. எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அவனால் நினைவுகளை மட்டும் மறக்க முடியவில்லை. ஊரை விட்டு ஓடிவந்த பயங்கரம் நிறைந்த அந்த இரவு அவனின் மனதில் படிந்து போயிருந்தது.

வாசலிற்கு வந்த தம்பிக்கு அதிசயமாயிருந்தது. அம்மம்மா முத்தம் கூட்டிக்கொண்டிருந்தா.

"அம்மம்மா, இண்டைக்கு ஏன் நீங்கள் கூட்டுறீங்கள்" அதிசயமாகக் கேட்டான் தம்பி.

"மாமா வந்தவன் அல்லோ, அவன் அடுத்தமுறை வரும் வரைக்கும் இந்தக் காலடிகளை நான் பார்த்துக் கொண்டே இருப்பன், அவன்ரை நினைவு வரேக்கை எல்லாம் வந்து பார்ப்பன்" அம்மம்மா மாமாவின் காலடிகளைப் பார்த்துக் கொண்டே சொல்லிக் கொண்டிருந்தா.

"அம்மம்மாவிற்கு சரியான விசர்" தம்பி சொல்லிக் கொண்டே பள்ளிக்கூடத்திற்கு ஓடினான். பள்ளிக்கூடத்திலயும் அரைவாசி நேரம் மாமாக்களின் கதைதான். அவர்களின் துணிவைப் பற்றியும் அவர்களின் துவக்குகளைப் பற்றியும், தெரிந்தவற்றையெல்லாம் கதைப்பார்கள். மத்தியான நேரம் தம்பிக்கு அடிவயிற்றில் பசி கிள்ளியது. மணி அடித்ததும் வீட்டை ஓடவேணும். பாடசாலையை விட்டு வெளியே வந்தான். பாலத்திலிருந்து முறிகண்டி அண்ணை இவனிடம் வந்தார். ஊருக்கு உதவாத அந்த மனுசன் கண்கள் ஏன் கலங்கி இருந்தது.

"உன்ரை மாமாவை முறிப்பில..... அவனால் அதற்கு மேல் கேட்க முடியவில்லை வீட்டை ஓடினான்.

"டேய், பார்த்து வாடா" மகனின் காலடி அழிந்து விடுமென அம்மம்மா கத்தினா. அவ பார்க்கிற கடைசிக் காலடி. அவன் பேசாமல் வீட்டுக்குள் போனான். அவனை அறியாமல் அழத்தொடங்கினான்.

"தம்பி ஏன்ரா அழுகிற"

அந்த நேரம் வாசலில் சனச் சத்தம் கேட்டது. அம்மம்மா வாசலிற்கு சென்றாள். "அம்மா உங்கட மகன்...."

அம்மம்மாவிற்கு எதுவுமே தெரியவில்லை. உலகமே இருண்டது.

- லெனின் -

பெண்களுக்கு சம்பிரதாயமான சமத்துவத்திற்க்காகப் போராடாமல், பொருளாதார மற்றும் சமூக ரீதியான சமத்துவத்திற்காகப் போராடுவது உழைக்கும் பெண்கள் இயக்கத்தின் முக்கியமான கடமையாகும். பெண்களைக் 'குடும்ப அடிமைத் தனத்திலிருந்து' விடுவித்து, உணவு சமைப்பது, குழந்தைகளை வளர்ப்பது என்ற வகையில் நெடுங்காலமாக இருந்துவரும் அலுப்புத் தருகின்ற வேலைகளுக்கு, அவமானகரமான முறையில், உணர்ச்சிகள் மழுங்கிப்போகும் விதத்தில் அடிமையாக இருப்பதிலிருந்து விடுதலை செய்து சமூக ரீதியில் பயனுள்ள உழைப்பில் அவர்கள் பங்கு கொள்ளுமாறு செய்வதே முக்கியம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



அந்தக் கடைசிக் காலடியும் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தது.

*** *** ***

காட்டிற்கு அருகில் இருந்த குடிசை ஒன்றில் தங்கியிருந்தான். அன்று பயிற்சிக்கு புதியவர்களை அழைத்து வந்திருந்தார்கள். அதில் தம்பியும் ஒருவன். தங்கன் போராட்ட கஷ்டங்களை ஒவ்வொருவருக்கும் விளக்கினான். அடுத்தது தம்பியின் முறை.

"தம்பி, நீ நினைக்கிறமாதிரி இல்லையடா, இயக்கம். சரியான கஷ்டம். உன்னாலை ஏலாது. மாமா செத்தும் கொஞ்சநாள்கூட ஆகேல அம்மா பாவம், நீ வீட்டைபோ" என்றான் தங்கன்.

"மாமா இல்லையெண்டபடியால் தானே நான் வந்தனான். குடும்பத்தில ஆராவது ஓராள் இயக்கத்தில இருக்கத்தானே வேண்டும்" அவன் சினத்துடன், சிணுங்கத் தொடங்கினான்.

"உனக்கு வயசு காணாது, கஷ்டமும் விளங்கேலை. பிடிவாதமா நிக்கிற எதுக்கும் வா - போகப் போகத் தெரியும்" சொல்லிக் கொண்டே தங்கன் வெளிக்கிட்டான்.

அவர்களும் எழுந்து நடந்தார்கள். சாதுவான நிலவு தெரிந்த இரவு நேரம். காடுகளிற்கூடாகவும், கிராமங்களிற்கூடாகவும் நீண்ட தூரம் நடந்தார்கள். சில வேளைகளில் இந்தியப்படை முகாமின் வேலிகளுக்கருகாலும், -ஆபத்து நிறைந்த ஒழுங்கைகளிற்காலும். இருளோடு இருளாக அவர்கள் சென்றார்கள். முடிவில், வயலுக்குத் தண்ணி கொண்டு செல்லும் ஒரு பாலத்தில், தங்கன் ஆறுதலாக இருந்தான்.

"உங்களுக்கு இப்ப ஓரளவு விளங்கி இருக்கும். இப்படித்தான் போராட்டம். போராளிகளின் வாழ்வு, நாங்கள் எப்பவும் சாகலாம். ஆபத்து நிறைந்ததுதான் எங்கட வாழ்வு. பிரச்சனை இல்லை. ஆராவது வீட்டை போறதெண்டால் போகலாம்" தங்கன் அமைதியாகச் சொன்னான்.

"அண்ணை நாங்கள் வரேலை" நாலு பேர் நின்றனர்.

சரி, தம்பியை மட்டும் விட்டுவிட்டு, மற்றவையைக் கூட்டிக் கொண்டு போகச்சொல்லி தன் தோழன் ஒருவனுக்கு கூறினான். போகப் போறன் என்று சொன்னவர்களுக்கு எப்படிப் போகவேணும் என்று சொல்லிவிட்டு தங்கன் திரும்பினான்.

தம்பி, கேவிக் கேவி அழ வெளிக்கிட்டான்.

"நான் வீட்டை போகேலை" என விம்மினான். தங்கன் ஆறுதலுடனேயே அவனது தலையை அணைத்தான். அவனும் அவனில் சாய்ந்து மேலும் பலமாக அழுதான்.

"சரி வா" என்றான் தங்கன். அடுத்த நிமிசம், அழுகையைக் காணவில்லை. 'வாங்கோ போவம் அவையள் போகப் போகினம்' என்று அவசரப்பட்டான் தம்பி.

**உங்களுடன்....**

**போகின்றேன்**
**களம் நோக்கி...**
**சில வேளைகளில்...**
**என் மூச்சுக்களும்**
**சுட்டுப் பொசுக்கும்**
**சிவந்த கண்களும்**
**சிதறி வெடிக்கும்**
**உடைகளும்**
**என்**
**இறுதி வார்த்தைகளும்**
**உங்களுக்குக் கிடைக்காமல்**
**போகலாம்**
**ஆனால் நாளை...**
**சுதந்திரத்தின் பிரசவிப்பில்**
**உங்கள் முற்றத்தில்**
**மலராய்**
**நான் மலர்வேன்.**

தங்கன் சிரித்துக் கொண்டான். எங்கட மண் ஒப்பற்றது. இந்த மண்ணிலதான் இப்படிச் சிறுவர்கள் தோன்ற முடியும். அவனது நெஞ்சம் கனத்தது.

விடிந்தது. பயிற்சிக்கு வந்த புதிய போராளிகளை, பழைய போராளிகள் நின்று பார்த்தனர். தம் இளைய சந்ததியை ஆசையோடு பார்த்துக் கொண்டிருந்த அவர்களின் கண்களில் அன்பு, பாசம், நட்புணர்வு எல்லாம் வெளியாகவே தெரிந்தது.

"தங்கண்ணா இவனைக் கூட்டியரேக்கை, ஒரு பசுமாட்டையும் கொண்டு வந்திருக்கலாம்" தம்பியைப் பார்த்துக் கொண்டே ஒருதோழன் சொன்னான்.

"டேய், நீ படிக்க கள்ளத்தில தான் இயக்கத்துக்கு வந்தனி" தம்பியின் முகம் கோபத்தால் சிவந்தது.

"வேணுமெண்டால் பள்ளிக்கூடத்தில போய்க் கேளுங்கோ, நான் எத்தனையாம் பிள்ளை என்று. நான் ஆரெண்டு தெரியேலை" அவன் சிறுபிள்ளைத்தனமாகவே சொன்னான்.

"டேய், அவன் மகேந்தியின்ர மருமோனடா" என்றான் தங்கன்.

"ஆர் எங்கட மகேந்தி அண்ணையின்ரயோ" அந்த முகாமின் பொறுப்பாளன் கண்களை அகல விரித்தபடியே கேட்டான்.

"ஓம், கப்டன் மகேந்தி"

"ஆளப் பார்க்கத் தெரியுது" கேலியாகப் பேசிக் கொண்டே அவர்கள் தூரவிலகிச் சென்றார்கள். அன்றிரவு..., அந்த முகாமின் பொறுப்பாளன் தங்கனுக்கு அருகில் வந்தான்.

"மகேந்தி அண்ணை செத்து இன்னும் ஒரு மாதம் கூட ஆகேல, அவனை வீட்டவிடுவம், தாய்மனுசி பாவம். ஒரேயொரு பெடியன் -கொஞ்சநாட் கழித்து வரட்டும்" என்றான்.

"நான் சொல்லீட்டன். வேணுமெண்டால் நீ சொல்லிப்பார்" என்றான் தங்கன்.

"நான் சொல்லப் போறதில்லை. ஒரு கிழமைக்கு போட்டு நல்லா வாட்டப் போறன். இதுதான் பயிற்சி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எண்டு தெரியட்டும் -ஆள் தானாப் பறப்பார்" அவர்கள் சத்தமில்லாமல் சிரித்துக் கொண்டார்கள். நிலவு வெளிச்சம் கூட நுழைய முடியாத காட்டின் இருள் அவர்களை மூடி இருந்தது. எப்போ விடியும் என அவர்கள் மரங்களின் இலைகளிற்கால் தெரிந்த நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டு நீண்ட நேரமாக விழித்திருந்தார்கள். பின் உறங்கிப் போனார்கள். விடிந்ததும் தங்கன் வெளிக்கிட்டு வேறு முகாமிற்குச் சென்று விட்டான்.

*** *** ***

தங்கன் அந்த முகாமிற்கு வந்தான். சின்ன மகேந்தி சிரித்துக் கொண்டே அவனருகில் வந்தான். தன் மாமாவின் பெயரையே தனக்கு வைத்தாக சொன்னான். தலைமயிரை ஒட்ட வெட்டியிருந்தான். தோளில் துப்பாக்கி ஒன்று கனத்தது. அவனை திருப்பி அனுப்புவதற்காக கொடுக்கப்பட்ட கடுமையான பயிற்சிகளே, அவனை ஒரு திறமையான சின்னப் போராளியாக ஆக்கியிருந்தது.

"எங்கயாவது அடிபிடிக்குப் போவேணும்" தங்கனுக்கு அருகில் இருந்தபடியே சின்ன மகேந்தி கேட்டான்.

"அதுக்கென்ன போனாப் போகுது" என்றபடியே தங்கன் மேலே பார்த்தான். இலைகள் ஒன்றுடன் ஒன்று முத்தமிட்டு சூரியக்கதிர்களை மறைத்து நின்றது. கிளைக்ளில் தாவி வந்த குரங்கொன்று தன் பல்லைக்காட்டி விட்டுப் போனது.

"குரங்குக்குக் கூடஉங்களோடதான் பகிடி" என்று சொல்லி விட்டு மகேந்தி சிரித்தான். அவனது கண்களை ஆழமாகப் பார்த்தபடியே,

"மகேந்தி, நீ ஏன் இயக்கத்துக்கு வந்தனி" என்று கேட்டான் தங்கன். மகேந்தியின் சிரிப்பு நின்றது. சின்ன முகம் கடுமையாக மாறியது.

"எனக்கு ஒரேயொரு விருப்பம் தான். எங்கட ஊருக்கு நாங்கள் எல்லாம் போக வேணும். தங்கன் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான். இந்த பிஞ்சு உள்ளத்திலே இப்படி ஒரு எண்ணம்...

"தங்கண்ணை, நானும், அம்மாவும் எங்கட ஊராக்களும் இரவிரவா -சாப்பாடு இல்லாமல், சேத்திலயும், தண்ணியிலயும் விழுந்து, விழுந்து ஓடிவந்ததை நான் மறக்கேலை. மறக்கப் போவதும் இல்லை." அவன் சொல்லிக் கொண்டிருந்தான். தங்கன் அந்தச் சின்ன எரிமலையை வியப்புடன் பார்த்து கொண்டிருந்தான். ■

## X'mas Call to Sri Lanka From Thamil Eelam

Christ was born in a Cattle Shed
To the tinkle of the cow bell
Eelam babes are born in refugee shed
To the roar of a different 'Bell' (Heli)

Just out of the womb
They see our heroes' tomb
Blast of the bomb they hear
Fails to make them fear
Herod killed the tow year olds
Prema kills the tow month olds

Not by the sword
But by his words (orders)
With no SMA and economic blocade
That failed in the last decade
Dharmishta to preach
But no settlement to reach
All he preaches
Sends his soldiers in crutches
The wer he heads
Drives the Lankan economy dead
Eelam could survive
Can Lanka revive

Jesus cared for the oppressed
Lankans make us depressed
All are full of joy
When Christ is thought
Not the Eelam boy
As he is always faught
When we think of peace
You don't take with ease
Forget your hate
For Lanka's fate
If you fail to stretch your arms
New borns too will fetch the arms
So on this joyful day
Let's think of a way
To live in peace
Or fight for a piece
We wish you well and pray
You are not made the Politicians' prey.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# இயற்கையும் மனிதனும்

கட்டுரைத் தொடர் - 2

ஆக்கம்: சங்கர்

பூமியினதும், சூரியகுடும்பத்தில் உள்ள மற்றக் கிரகங்களினதும் தோற்றமானது வெறுமனே ஊகிக்கப்பட்டதல்ல, பூமியையும் மற்றக் கிரகங்களையும் அவற்றில் தொடர்ந்து வரும் மாற்றங்களைப் படித்தறிந்த பின்னரே இது உறுதியாக்கப்பட்டது. விண்கற்களின் மோதுகை பூமியில் நடந்ததற்கான பல ஆதாரங்களும், ஒரு சில வருடங்களுக்கு முன் பூமியில் இருந்து விழுந்த விண்கற்களும் இவற்றிற்கு ஆதாராமகா அமைகின்றன. இருப்பினும், பூமி தோன்றியதிலிருந்து அதன் பூகோள அமைப்பில் பல மாற்றங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. இவை எமக்குப் பல உண்மைகளைப் புரிய வைத்துள்ளதுடன், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்களையும் எமக்குத் தெரிவிக்கின்றன.

450 கோடி வருடங்களுக்கு முன் பூமி தோன்றியபோது அது ஓர் நெருப்புக் கோளமாகத்தானிருந்தது. அதைச்சுற்றி வளிமண்டலத்தில் நீராவியும் மற்றைய வாயுக்களும் நிரம்பியிருந்தது. இதன் எல்லை சுமார் 500 கி. மீ. ஆக இருந்தது. வளிமண்டலம் குளிர ஆரம்பித்ததும் அதில் உள்ள நீராவி ஒடுங்கி பூமியை அடைந்தது.



பின் அது பூமியின் மேற் பகுதியில் பட்டு மீண்டும் ஆவியாகி

யது. இந்த மாற்றம் சுமார் 100 கோடி வருடங்களுக்கு தொடர்ந்து நடந்தது. இறுதியில் பூமியில் சமுத்திரம் தோன்றிற்று. இந்தச் சமுத்திரம்தான் பூமியில் உயிர்கள் தோன்றுவதற்கு முதற் காரணம் ஆயிற்று.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



அத்துடன் பூமியில் உயிர்கள் வாழக்கூடிய சூழ்நிலைக்கு அது காரணமாயிற்று. இன்றும் பூமியில் உயிர்கள் வாழ்வதற்கு காரணமாக சமுத்திரம் இருந்து வருகின்றது.




பூமி குளிர்ந்து அதில் சமுத்திரம் தோன்றிய போது இன்று நாம் காணும் சமுத்திரம் போல அது இருக்கவில்லை. அது ஒருவித தடித்த கூழ் போன்ற நிலையில் அமைந்திருந்தது. இந்தக் கூழில், ஒரு கல அமைப்புள்ள உயிர்கள் தோற்றம் பெற்றன. (இந்த ஒருகல உயிர்கள் படிப்படியாக வளர்ச்சி பெற்று அவற்றிலிருந்து மற்றய விலங்குகளும் தாவரங்களும் உண்டாகின. அமெரிக்க ரஷிய விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளின்படி பூமியில் உயிர்கள் முதலில் கடலிலேயே தோன்றி வாழ்ந்தன.) கடலில் தோன்றிய இந்த ஒரு கல அமைப்பு உயிர்கள் பல நிலைகளில் இணைந்து வெவ்வேறு வகை உயிர்களை தோற்றின. ஆனால் ஆரம்பத்தில் தோற்றம் பெற்றது கடற்ப் பாசியாகவே இருந்தது. இந்தப் பாசியில் இருந்து இயங்குநிலை உயிர்கள் (விலங்குகள்) வளர்ச்சி பெற்றன.

தாவர நிலையிலிருந்து விலங்கு நிலைக்கு மாற்றம் அடைய பல இலட்சம் வருடங்கள் எடுத்தன. இந்த மாற்றமானது பூமியில் உயிர்கள் முதலில் தாவர நிலையிலும் பின்னர் அதிலிருந்து விலங்கு (மீனின) நிலைக்கும் பரிநாமம் அடைந்தது. கடலில் பரிநாமம் அடைந்த விலங்குகள் (மீனினங்களும்), தாவரங்களும் பின்னர் தரையில் வாழும் நிலைக்கு பரிநாமம் அடைந்தன. இந்தப் பரிநாம வளர்ச்சிகளின் உயர்ந்த கட்டமாக இன்று பூமியில் மனிதன் வாழ்கின்றான். இந்தப் பரிநாம மாற்றமானது வெறுமனே தானாக ஏற்பட்டதல்ல, இயற்கையின் ஒவ்வொரு மாறுதல்களுக்கும் ஏற்ப இசைவுடன் ஏற்பட்டதாகவே உள்ளது.

அதேவேளை பூமியின் உட்பரப்பு ஓர் எரிகுழம்பாக உள்ளது. வெளிப்பரப்பில் நிலப்பரப்பும், நீர்ப்பரப்பும் கூட மாறுதல் அடைந்து கண்டங்களும் சமுத்திரங்களும் தோன்றின. பல கோடி வருடங்கட்கு முன் இருந்த நிலப்பரப்புகள் கடலில் அமிழ்ந்து போக கடலினுள் இருந்த நிலப்பரப்பு மேலே வந்துள்ளது. இது பூமியில் கண்டங்கள் நகர்ந்து செல்வதைக் காட்டுகின்றது.

கடலில் 350 கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றிய உயிர்கள் பலவித பரிணாமங்களை அடைந்து அழிந்து போயின. இத்தகைய உயிர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கடலினுள் இருந்து மேல்வந்த பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதேபோன்று நிலப்பரப்பிலும் வாழ்ந்து அழிந்துபோன பல உயிர்களின் ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை எப்படி நடந்தன?

(தொடரும்)

'எதற்காக எழுதுகிறேன்?
என் இயற்கையைக் கண்டுபிடிக்க எழுதுகிறேன்;
சரி, என் இயற்கை என்ன?
மனிதனாக இருப்பதுதான்!'

அமரர் கு. அழகிரிசாமி

www.tamileelamarchive.com





கொம்படிப்பாதை

மக்கள் அவலம்



தமிழீழ ஆவணக் காப்பகம்
www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



www.tamileelamarchive.com